# வள்ளி அம்மன் நாடகம்



கலாபூஷணம் தாழை செல்வநாயகம்

நன்கொடையாக வழங்கப்பட்டது
தாழைச்செல்வநாயகம்

கலாபூஷணம் - தாழைசெல்வநாயகம்
(கலைஞர் விருதாகன் ஆளுநர் விருது)
RETD / FOREST OFFICER.
PETHALAI,
VALAICHENAI.

# வள்ளி அம்மன் நாடகம்

கலாபூஷணம் தாழை செல்வநாயகம்
கல்குடாவீதி
பேய்தாழை
வாழைச்சேனை
<u>இலங்கை</u>

தமிழ் அலைப் பதிப்பகம்
இல : 39A கோவிந்தன் வீதி
மட்டக்களப்பு
0779000004
கணனி அஞ்சல் : tamilalainews@gmail.com

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | வள்ளி அம்மன் நாடகம் © |
| நூலின் தன்மை | : | அழிந்து போகும் மரபுக் கலைகளை ஆவணமாக்கல் |
| நூலாசிரியர் | : | கலாபூஷணம் தாழை செல்வநாயம் |
| முதற் பதிப்பு | : | நவம்பர் - 2011 |
| வெளியீடு | : | கௌரவ முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் அனுசரணையில் தமிழலை அச்சகத்தினால் அச்சிடப்பட்டது. |
| கணினி வடிவமைப்பு | : | லி.கோபிநாத் |
| அட்டை வடிவமைப்பு | : | நவாஸ் சௌபி |
| பக்கம் | : | 132 |
| விலை | : | - |

# காணிக்கை



பேய்த்தாழையைச் சேர்ந்த அமரர் மனுக்கர் சின்னத்தம்பியும் அவர் மனைவி அமரர் சின்னப்பிள்ளை சின்னத்தம்பியும் எனது தந்தை வழியிலும் எனது மனைவி வழியிலும் மாமன் மாமி முறையான உறவினர்கள். அத்துடன் கௌரவ முதலமைச்சர் சி.சந்திரகாந்தனது அம்மப்பாவும், அம்மம்மாவும் ஆகும். அமரர் சின்னத்தம்பி அவர்கள் இக் கிராமத்தில் பாரம்பரியக் கூத்துக்கலைகள் மறையாது மனேச்சராகவிருந்து பல கூத்துக்களை அரங்கேற்றியவராகும். இவர்கள் இருவருக்கும் இந்நூலை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

— தாழை செல்வநாயகம் —

## கௌரவ முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் வழங்கிய வாழ்த்துரை



மட்டக்களப்பு மாநிலம் கலைவளம் மிக்கது. கிராமியப் பாடல்களும் பாரம்பரியக் கூத்துக்களும் இங்கு வாழும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிறைந்து காணப்படுகின்றன. ஐவகை நிலப் பண்பாடும் செறிந்துள்ள மட்டக்களப்பின் வடக்கே மகாவலி ஆறு பாய்ந்து செல்லும் வெருகல் தொடக்கம் தெற்கே பெரிய நீலாவணைவரையும் அதன் உள்ளிட்ட பிரதேசங்களான கல்லாறு, களுவாஞ்சிக்குடி, பழுகாமம், வெல்லாவெளி, பட்டிப்பளை, ஆரையம்பதி, கன்னங்குடா, செங்கலடி, சித்தாண்டி, சந்திவெளி, கிரான், கிண்ணையடி, பேத்தாழை, பனிச்சங்கேணி, வாகரை, கதிரவெளி போன்ற பிரதேசங்கள் கூத்துக்களால் சிறப்புப் பெற்ற பிரதேசங்களாகும்.

இப்பிரதேசங்களில் அங்குள்ள மக்களால் ஆடப்படும் வடமோடி, தென்மோடி கூத்துக்கள் பற்றி நான் அறிந்துள்ளேன். அத்தகைய கூத்துக்கள் கொப்பிகளில் எழுதப்பட்டுள்ளதனையும் அவைகள் அழிவடைந்து போகும் ஆபத்தான நிலையில் உள்ளதனையும் நான் அறியாமலில்லை.

நான் பிறந்த அதே கிராமத்து மண்ணில் பிறந்த திரு. தாழை செல்வநாயகம் அவர்கள் "வள்ளியம்மன் நாடகம்" என்ற கூத்து தொகுப்பினை நூலுருவாக்குவதற்கு எடுத்த முயற்சியினை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அவரது முயற்சிக்கு ஊக்கம் கொடுத்து இந் நூலினை எனது நிதியில் அச்சிட்டு வெளியிட்டு வைக்கவும் முன் வந்துள்ளேன். என்பதில் பெருமையடைகிறேன். நாவல், சிறுகதை, கவிதைகள் எழுதி வெளியிடும் எழுத்தாளர்கள் எவரும் அழிவடைந்த போகும் ஆபத்தான நிலையில் உள்ள கூத்துக்கள் போன்ற கலைப் பொக்கிஷங்களை தேடிப்பிடித்து ஆவணமாக்க முன்வருவதில்லை.

கலாபூஷணம் திரு. தாழை செல்வநாயகம் இப்பிரதேசத்தின் ஏனைய எழுத்தாளர்களைவிட முன்னிலையில் நின்று. அழிவடையும் எமது கலைகளைப் பேணுவதில் கண்ணும் கருத்தமாகவுள்ளார் என்பதனைத் துணிந்து கூறுவதுடன். அவரின் இத்தகைய முயற்சிகளுக்கு நானும் என்றும் உறுதுணையாகவுள்ளேன். என்றும் கூறி அன்னாரின் கலைப்பணி வாழ என்றும் என்னுடைய வாழ்த்துக்கள்!

கௌரவ முதலமைச்சர்
சி. சந்திரகாந்தன்
கிழக்கு மாகாணசபை.



கலாபூஷணம் திரு. தாழை செலவநாயகம் தொகுத்து வழங்கும் "வள்ளியம்மன் நாடகம்" கூத்துப் பிரதிக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் உளம் மலர்ந்த இதய பூர்வமான மகிழ்ச்சி அடைபவர்களில் நானும் ஒருவன்.

இவ்வகையில் கலாபூஷணம் திரு. க. செல்வநாயகம் அவர்கள் கட்டுரையாளராகவும், சிறுகதை ஆசிரியராகவும், நாடக நெறியாளராகவும், நடிகராகவும் பிரதியாக்க கர்த்தாவாகவும், கவிஞராகவும் மேடைப் பேச்சாளராகவும், கூத்து தயாரிப்பாள ராகவும் பல துறைகளில் பிரபல்யம் பெற்று பிரதேச செயலக மட்டத்திலும் மாவட்டமட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பல கௌரவங்களைப் பெற்று விளங்கும் ஒருவர் ஆவார்.

இந்நிலையில் அவரால் தொகுத்து வழங்கப்படும் கண்டி இராசன் கதை, வள்ளியம்மன் நாடகம் என்பனவற்றை எடுத்து நோக்கும் போது இவை பல்வேறுபட்ட பிரதேசங்களில் ஏட்டுப்பிரதியாகவும் கையெழுத்து பிரதியாகவும் காணப்பட்டவை ஆகும். இவற்றினை தமிழ் தந்த சி. வைதாமோதரம் பிள்ளை போல் தேடித் தொகுத்து பிரதிகளை ஒப்பீடு செய்து உரிய சொல்வளம்

உரிய கன அமைப்புடன் தொகுத்து வெளியிடுவது என்பது ஒரு சமூகத்தின் கலை அமைப்பு கலைஞர் குழு செய்ய வேண்டிய பணியினை தொகுத்து தனியாளாக செய்து இருப்பது பாராட்டவேண்டிண ஒரு நிகழ்வு ஆகும்.

இவ்வகையில் இந்நூலுக்கு பிரதேச செயலாளராக ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

**திரு. சீ. கிரிதரன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று
வாழைச்சேனை.

அணிந்துரை



மட்டக்களப்பு மாவட்டத்தின் கலைஞர்களினை எடுத்து நோக்கும்போது அவர்களை பல பிரிவுகளாக நோக்கமுடியும்.

1ம் பிரிவினர்
கலை என்பதற்காக தமது வாழ்வினை அர்ப்பணம் செய்தவர்கள் இவர்கள், பட்டங்கள் பதவிகளை வெறுப்பவர்கள்.

2வது பிரிவினர்
தாய் தந்தையின் பாரம்பரியம் இவர்களை முழுமையாக ஆட்கொள்ளும்போது அதன் தொடராக இவர்கள் காணப்படுவார்கள். இதில் இருவகை உண்டு இயல்பாகவே ஆற்றல் கொண்டவர்கள் முதலாம் பிரிவிலும், இரண்டாம் பிரிவுதான் அவரின் புதல்வன் எனவே என்னையும் கலைஞராக ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கருதுபவர்கள்.

3வது பிரிவினர்
சமூகம் தங்களையும் கலைஞராக ஏற்கவேண்டும் எனக் கருதி தங்கள் முன் பட்டங்களை தாமாக அல்லது ஒருவருக்கு ஒருவர் பெயர் சூட்டும் சந்தர்ப்பங்கள் உதாரணமாக கவிஞர் எனும் பட்டங்கள் சூடிக்கொண்டவர்கள் அதிகம்.

4வது பிரிவினர்
தாங்கள் எழுதிய ஆக்கங்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பி அவை வெளிவராத நிலையில் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி சஞ்சிகை வெளியிடுவதுடன் இயலாத நிலையில் அதனை இடைநிறுத்திவிட்டு தானும் கவிஞர்தான் தனக்கும் கலைபற்றித் தெரியும் எனத் தம்பட்டம் அடிக்கும் ராஜாக்களும் உண்டு.

5வது பிரிவினர்
பலர் எழுதிய கட்டுரைகளையும் கள ஆய்வுகளின் ஊடாகவும் மக்களுக்கு இலகுவாக புரியும் வகையில் உப தலைப்புக்களுடன் ஆக்கங்கள் எழுதுபவர்களும் உண்டு.

6வது பிரிவினர்
அரசியல் செல்வாக்கு மூலம் விருதுகள் பெற்று விருதுகளுக்கு கலைப்பணி செய்து அல்லது செய்யாது விட்டு பின்னர் தமது கல்லறைகளில்கூட விருதுகளை எழுதியவர்களும் உண்டு.

இவ்வகையில் தாழையூரானை எடுத்துநோக்கும்போது முதலாம் பிரிவுக்குள் இணைக்கப்பட வேண்டியவர் என்பதுடன் விருதுகள் கிடைக்கப்பெற்றவுடன் புதிய உத்வேகம் கொண்டு பணி செய்வது மகிழ்ச்சியினை தருகின்றது.

நீண்டகாலம் இலக்கியப் பணி தொடர்பாக அரச ஊழியன் எனும்வகையில் அவருடன் தொடர்புகொண்டதன் விளைவாக நான் அவரைப்பற்றி அறிந்தவிடயம் சமூகத்தினைப்பற்றியும் அதனது பாரம்பரியம் அழிவடையும் நிலைகண்டு கவலை அடைந்து தன் உயிர்வாழும் காலத்தில் ஏதாவது செய்ய வேண்டும் என ஆசைகொண்டு இயங்கும் மனிதர்.

இவ்வகையில் பாரம்பரிய பண்பாடுகளை எழுத்துவடிவில் ஆக்குவதிலும், மறைந்துபோகும் கிராமிய கலைகளை அதே வடிவில் புதிய சமூகத்திடம் கையளிக்கவேண்டும் எனும் ஆர்வமும் கொண்டவர்.

இதனை அவரது கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள், பேச்சுக்கள் ஊடாக அறியமுடியும். இவ் ஆக்கங்கள் சமூகத்தின் கூட்டுவாழ்க்கை, கிராம வாழ்க்கை, நகர வாழ்க்கை என்பனவற்றைப் பிரதிபலித்து நிற்பது சிறப்புமிக்கது.

இவ்வாறு படைப்பு ஆற்றல் கொண்ட திரு.க.செல்வநாயகம் (தாழையூரான்) ஏடுகளிலும் கையெழுத்து வடிவிலும் காணப்பட்ட நாட்டுக் கூத்துக்களான வள்ளியம்மன் நாடகம், கண்டிராசன் கதை என்பனவற்றை கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சி.சந்திரகாந்தன் அவர்களின் வழிகாட்டலில் அச்சு வாகனம் ஏற்றி இருப்பது காலத்தின் தேவையாகும். காலத்தின் தேவை எனும்போது எழுத்தறிவு இல்லாத காலகட்டங்களின் மக்களை அறநெறிப்படுத்த கூத்துக்கலை பயன்பட்டது. அச்சுவாகனம் வந்தபின்னர் இதிகாச புராணங்கள் ஏட்டுவடிவில் வரலாயின. நவீன தொழில்நுட்பத்தில் அவை இறுவட்டு வடிவில் வந்தபோதிலும் அவை முழுமையான தாக்கத்தினை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளதா என நோக்கும்போது அது கேள்விக்குறியாகவே உள்ளது.

மேலும் பல்கலைக்கழக வித்தகர்கள் தமிழ்த் தினப் போட்டிகள் என்பனவற்றின் நிமித்தம் கூத்து மாற்றம்பெற்று வருகின்றது. இந்நிலையில் கூத்துக்களின் ஒருசில முக்கிய பகுதி கலாசார விழா மலர்களில் வெளிவந்தவண்ணம் காணப்பட்ட போதிலும் முழுமையாக நூல்வடிவம் ஆக்கிய பெருமை புலவர் வி.சி.கந்தையா ஐயாவின் பின்னர் 35வருடங்களின் பின்னர் தாழை செல்வநாயகம் அவர்களினையே சேரும்.

இவ்வாறான பணிகளுக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் எனும் வகையில் தனிப்பட்ட ரீதியில் கடமைப்பட்டவனாக இருப்பதுடன் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.கே.எஸ்.ஆர்.சிவகுமார்
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
கிரான்-நிரந்தரமாக
வாழைச்சேனை- தற்காலிக இணைப்பு

## கூத்து நூல்கள்

மட்டக்களப்பு கிராமங்கள் பலவற்றில், காலம் காலமாக கூத்துப் பாத்திரப் பெயர்களாலேயே பலர் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். விடியவிடிய ஆடப்படும் இக்கூத்துக்களை மக்கள் இரவு முழுக்க கண்விழித்திருந்து பார்ப்பது வழக்கம்.

ஆனால் இன்று இக்கூத்துக்கள் அருகிவிட்டன. அதற்கு முக்கியகாரணம் நூலுருவில் இக்கூத்துக்கள் ஆவணப்படுத் தாமை எனலாம். நான் அறிந்தவரை மட்டக்களப்பு கலாசாரப் பேரவை 1960 களில் இரு கூத்துக்களை நூலாக வெளியிட்டது. அவை.

1. இராமநாடகம் (வடமோடி)
2. அனுவுருத்திர நாடகம் (தென்மோடி) என்பனவாகும்.

பல வருடங்களுக்குப்பின் 1995ல் மட்/ மாவட்ட கலாசார உத்தியோகத்தர் க. தங்கேஸ்வரி யினால் பேராசிரியர் திரு சி . மௌனகுரு நெறிப்படுத்தலுடன் கூத்துக்கள் "வீடியோகேசட்டுகளில்" பதிவு செய்யப்பட்டன.

1. சுபத்திரை கல்யாணம் (வடமோடி)
2. அல்லிநாடகம் (தென்மோடி)

அண்ணாவிமார் சுவைஞர் நேர்காணலும் (9) ஒன்பது வீடியோகேசட்டுகளில் பதிவு செய்யப்பட்டு அவற்றின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

தற்போது இக்கூத்துக்கலையை மக்கள் மறந்து வரும் நிலையில் திரு. தாழை செல்வநாயகம் வள்ளியம்மன் கதை (வடமோடி) நூலினை வெளியிடுகிறார்.

இம்முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஏனையோரும் இவ்வாறான கூத்து நூல்களை வெளியிடுவதற்கு இது ஒரு முன்னோடி நிகழ்வாகும். இவ்வகையில் தாழை செல்வநாயகம் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவராகிறார்.

இரா. நாகலிங்கம் **JP**
தவபதி – ஆரையம்பதி – 1
(அன்புமணி)
27.05.2011

## தொகுப்பாசிரியரைப் பற்றிய தகவல்

தந்தையின் பெயர் :- கண்ணன் கந்தையா

தாய் பெயர் :- கந்தையா தங்கம்மா

ஆசிரியர் பெயர் :- கந்தையா செல்வநாயகம்

புனை பெயர் :- தாழை செல்வநாயகம்

பிறப்பிடம் :- வாழைச்சேனை

பிறந்த திகதி :- 06.04.1946

துணைவியின் பெயர் :- கருணைலெட்சுமி செல்வநாயகம்

கல்விகற்ற பாடசாலை :- வாழைச்சேனை இந்துக் கல்லூரி,
வந்தாறுமூலை மத்தியகல்லூரி

கல்வித் தகைமை :- க. பொ. த. உயர்தரம்,
கலைமுதற் தேர்வு (G.A.Q)

பெற்றுள்ள விருதுகள் :-

1. கலாபூஷணம்
2. ஆளுநர் விருது
3. சாஹித்திய விருது
4. கலைஞர் விருதுகள் - 02

**வெளியிட்ட நூல்கள் :-**

1. ஏதிலிகள் - சிறுகதை
2. "ஈழம் வருகிறான் பாரதி" (நாடகம்)
3. வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள் - (ஆய்வுநூல்)
4. வள்ளியம்மன் நாடகம் - (தொகுப்பு நூல்)
5. கண்டிராசன் கதையும் , அனுமன் தேடிய சீதையும் - (இருகூத்துக்களின் தொகுப்பு நூல்)

பத்திரிகை நிருபராகவும், வீரகேசரியில் 25 வருடங்கள் கடமையாற்றியதுடன் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நாவல் ஆகியன எழுதுவதிலும் ஆற்றல் பெற்றவர். நாடகம் நடிப்பதிலும், கிராமியப் பாடல் பாடுவதிலும் ஈடுபட்ட பல்துறைக் கலைஞர்.

# முன்னுரை

மட்டக்களப்பு கலைவளம் நிறைந்த நாடு. ஈழத்தின் ஏனைய பகுதிகளைவிட இங்கேதான் முஸ்லிம்களின் மத்தியில் நாட்டுப் பாடல்களும், தமிழர்களின் மத்தியில் நாட்டுக் கூத்துக்களும் மலிந்துள்ளன. பனை ஓலை ஏட்டுக் கட்டுகளிலும், அண்ணாவி மார்களின் வாயிலும், கறையான் சுவைத்த கொப்பிகளிலும் நாட்டுக் கூத்துக்கள் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள், இடத்திற்கு இடம் வரிமாறுபாடுகள், கொண்டன வாயுமுள்ளன.

பண்டிதர் வீ.சி கந்தையா அவர்கள், நாட்டுக் கூத்துக்கள் இரண்டினைத் தேடிப் பொறுக்கி இரண்டு புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். ஒன்று தென்மோடி வகையினைச் சேர்ந்த அனுவுருத்திர நாடகம் மற்றையது வடமோடி வகுப்பைச் சேர்ந்த இராம நாடகம். இவ்விரண்டு நாட்டுக் கூத்துக்களையும் 1969ல் மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம், நடாத்திய அண்ணாவிமாரின் மகாநாட்டைத் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

இன்னும் 50ற்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துக்கள் அழிந்துபோகும் ஆபத்தில் உள்ளன. இவைகளைப் பொறுக்கி எடுத்துப் பதிப்பிப்பார் யாருமில்லை. அம்முயற்சியின் பயனாகவே சிறியேனாகிய யான், இந்நூலைப் பதிப்பிக்கவேண்டியேற்பட்டது. நூலுருவம் பெற்ற நாட்டுக் கூத்துக்களின் வரிசையில் இந்நூல் மூன்றாவது நூலாகும். பாட்டும் வசனமும் கலந்த "விலாசம்" என்ற பெயருடன் 1915களில் தோன்றிய மேடை நாடகங்களின் வரிசையில் "வள்ளி திருமணம்" என்னும் நாடகம் மட்டக்களப்பு பகுதிகளில் மேடையேற்றப்பட்டுள்ளதாக இப்பகுதியின் மூத்த அறிஞர்களில் ஒருவரான அன்புமணி ஐயா அவர்கள் தனது கட்டுரையொன்றின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நூலை பதிப்பிப்பதற்கு உதவியாகவிருந்த ஏட்டுப் பிரதியொன்றும், கொப்பிகளும் எனக்கு கல்குடாவைச் சேர்ந்த திரு.சி.கணபதிப் பிள்ளை அண்ணாவி (புட்டுவர்)யாரிடமும்,

பேத்தாழையைச் சேர்ந்த திரு.மாரி வெள்ளக்குட்டி அண்ணாவி யாரிடமும், கிரான் கோரகலிமடுவைச் சேர்ந்த திரு.பொன்னையா அண்ணாவியாரிடமும் கிடைத்தன. இவைகள் ஒன்றும் பூரணமான நிலையில் எழுதப்பட்டிருக்கவில்லை. இவர்கள் மூவரில் ஒருவருக்கு எழுத்தறிவு கூட இருந்ததில்லை. ஆனால் செவியேறல் மூலமாக இதில் உள்ள அனைத்துப் பாட்டுக்களும் அவருக்கு தலைதண்ணிப் பாடமாயிருந்தன. இவர்கள் மூவருடனும் மூன்றுமாத காலங்களாகத் தொடர்பு கொண்டும், கையகராதி ஒன்றின் துணையுடன் பிழையான சொற்களின் கருத்துக்களையும் கண்டுபிடித்தே என்னால் இதனை எழுதித் தொகுக்க முடிந்தது.

வள்ளியம்மன் நாடகம் எல்லா நாடகங்களுக்கும் முதன்முதலாக வந்த நாடகம் என்றும் இது உருவில் சிறியதாக வுள்ளதால் "கட்டுப்பெட்டி நாடகம்" என்றும் கூறப்படுவதாகவும் இப்பகுதியில் உள்ள அண்ணாவிமார்களே என்னிடம் தெரிவித்தார்கள். இதன் காரணமாகவே இதனை நான் தெரிவுசெய்து பதிப்பிக்கவேண்டி யேற்பட்டது.

மட்டக்களப்பில் வட்டக்களரிகளில் ஆடவர்கள் மாத்திரம்தான் கூத்துக்களை ஆடுவார்கள். இக்கூத்தினை நான் பாடசாலை மாணவிகள் சிலரைத் தெரிவு செய்து அண்ணாவிமார்கள் இருவரைக் கொண்டு பயிற்றுவித்து பத்துத் தடவைக்கு மேல் மேடை யேற்றியுள்ளேன். அத்துடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமும் இதனை ஒலி, ஒளிபரப்புவதற்கு அனுமதி கோரியிருந்தேன். அவர்களிடமிருந்து எனக்கு எதுவித பதிலும் கிடைக்காதிருப்பது புதுமையாகவுள்ளது. அத்துடன் கூத்துக் கலையினை புறக்கணிப்பதுமாகவுள்ளது. என நான் கருதுகின்றேன்.

நாட்டுவளம், தமிழ்ப் பண்பாடு நிறைந்த நாட்டுக் கூத்தினை படியாத பலர் நையாண்டி செய்கின்றனர். ஏன் படித்தவர்கள்கூட இதனை பேணிப் பாதுகாக்க முன்வருவதுமில்லை ஊக்கமளிப்பதுமில்லை. அரிதாகவே கிடைக்கும் கூத்துக் கொப்பிகளைக் புரட்டிப் பார்த்தால், பாட்டும் வசனமுமாகவே காணப்படும். மேடை நாடகங்களைப் போன்று களம், காட்சி என்று இல்லை. கூத்துக்களில் வரும்

ஒவ்வொரு காட்சியும் "வரவு" என்றுதான் கூறப்படும். கதை நிகழ்விடமான "களம்" காட்டப்படவில்லை. இதனை வேறுபடுத்திக் காட்டுமுகமாக "கொலு" என்ற சொல் உபயோகிக்கப்படும். "இராமர் கொலு" "பாண்டவர் கொலு" துரியோதனன் கொலு" என்பன இதற்கு உதாரணங்களாகும். நாட்டுக் கூத்துக்களில் வரும் இப்பிரச்சினைபற்றி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் இராம நாடகம் என்ற நூலின் அணிந்துரையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "இந்நாடகத்தின் அமைப்பானது களமும் காட்சியுமாக அமைந்திராமல் பாட்டும் வசனமுமாகவே சென்று முடிகிறது. நாடக நூல்களைக் களமும் காட்சியுமாக செம்மை செய்து கொள்வதும், பாகம் பாகமாக நடிப்பதற்கு வழிசெய்து காட்டுவதும் மேல்வரும் நாடகங்களில் அவசியம் இடம்பெறவேண்டும். "புலவர்மணி அவர்களின் எண்ணத்திற்கமையவே நான் இந்நாடகத்தை களமும், காட்சியுமாக ஒழுங்கு செய்து ஆக்கியுள்ளேன்.

பெரியோர்கள் இதில் எழுத்துப் பிழைகள் சொற்பிழைகள் இருப்பின் சுட்டிக் காட்டினால் திருத்தமுடியும் எனக் கூறி எனது முயற்சிக்கு ஊக்கம் அளிப்பீர்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

– நன்றி –

கலாபூஷணம் தாழை செல்வநாயகம்
கல்குடாவீதி
பேத்தாழை
வாழைச்சேனை
06-04-2011

## இந்நாடகத்தில் வரும் பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிருஷ்ணர் | 2. | லெட்சுமி |
| 3. | வேலநம்பி | 4. | தங்கரூபன் |
| 5. | செவிலி | 6. | வள்ளி |
| 7. | தோழி | 8. | நாரதர் |
| 9. | குறத்தி | 10. | குறவன் |
| 11. | வேடன் | 12. | காங்கேயராசன் |
| 13. | பண்டாரம் | 14. | யானைமுகன் (பிள்ளையார்) |
| 15. | முருகன் | | |

# களம் ஒன்று

வள்ளி அம்மன் நாடகம்
(வடமோடிக் கூத்து)

காட்சி ஒன்று

## விக்கினேசுவரர் துதி

சீராரும் துளவமணி மருகன் தானும் திசைமுகனும் நான்
மறையும் தேடிக்காணா
வாராரும் கொங்கை பங்கனீன்ற மைந்தரொடு தந்தை நல்லோர்
மகிழ்ந்து போற்றி
ஏராரும் வள்ளியம்மன் நாடகத்தை இயலிசை நாடகமாய்
இயைந்தே பாட
காராரும் திகடகர ஐங்கரத்து கணபதி காப்புத் தானே

## விஷ்ணு துதி

ஆரணப் பொருளே போற்றி! அகில நாயகனே போற்றி!
பாரளந்தவனே போற்றி! பாண்டவர் தூதா போற்றி!
வாரணமழைத்த போது வந்து காத்தவனே போற்றி! காரண
வஸ்துவான கண்ணனே போற்றி போற்றி!

## கிருஷ்ணர் லெட்சுமி கொலு (விருத்தம்)

பார்கடல் பிறந்த செல்வன் மாது செந்திருவினோடு
ஏர் பெறு விளங்க நல்ல இளவேனில் காலந் தன்னில்
பார் புகழ் வாணவேடிக்கை பார்த்திட மனதிலெண்ணி
கார் முகில் வண்ணரான கண்ணரும் வருகின்றாரே

## கிருஸ்ணர் பாட்டு

1. வந்தார் பாரீர் கோபால கிருஷ்ணர் வாறார் பாரீர் வந்தார்
இதோ பாரீர் வண்ண அணிகள் பூண்டு அந்தமாய்
லெட்சுமி அருகில் சூழ்ந்துவர (வந்தார்)

2. செங்கையில் சங்கும் மற்றொருகையில் சேர்ந்த
சக்கரமும் மந்திரமோதும் மகாமுனி சூழ்ந்திடப்
புகழ்ந்து லெட்சுமி நேசன் மகிழ்ந்து கொலுவை நாடி
(வந்தார்)

3. அண்டர் கருடாதி கந்தருபர் அருகினிற் சூழ புண்டரிகக் கண்ணன் புலந்திரன் கைலைவாழ் நன்றுள்ள சபைதனில் நாடி
நாரணமூர்த்தி (வந்தார்)

கிருஸ்ணர் மறு தரு

1. இந்த வனவிந்தையைப் பாராய் என் மானே தேனே
இந்த வனவிந்தையைப் பாராய்

2. சந்தக் குயில்கள் நின்று சொந்தக் கீதங்கள் பாட
சிந்தை மகிழ்ந்து நாம் திருப்தியாய் பார்ப்போம் வாராய்

லெட்சுமி தரு

மயில்கள் நிறையுமிந்த வனந்தனிலிப்போது
குயில்கள் கூவுகின்ற குரலோசையீது தானோ (இந்த)

கிருஸ்ணர் தரு

சித்திரை வைகாசி திங்களினால் வசந்த
காலமிசைந்து நல்ல கானகம் வந்தோம் பெண்ணே (இந்த)

லெட்சுமி தரு

அன்பாய் மகிழ்ந்து நாமும் திருப்தியாய் இவ்வனத்தில்
சொந்தமாய் இருவரும் சேர்ந்து இருப்போம் மன்னா (இந்த)

கிருஷ்ணர் தரு

வாசம் கமழ்கின்ற ஓடையிலே அன்னங்கள்
சோடு சோடாகவேதான் கூடுதுபார் பெண்ணே (இந்த)

லெட்சுமி தரு

உற்றமான் தன்னுடனே மற்றொரு கலைமான் வந்து
மகிழ்வுடனே வனத்தில் மருவுது பார் நாதா (இந்த)

லெட்சுமி விருத்தம்

ஐயனே கேளாய் இங்கே அரச்சனத்திற்கு முன்னால்
எய்திங் கொரு வழிப்பட்டிருந்தேன் மனம் வேறாகி
கைவளை சோர்ந்தலுத்துக் கவலைகள் மிகவேயாகி
மெய்யெல்லாம் நடுங்கி இந்த வேதனைக்கென்ன செய்வேன்

வசனம்

கேளும் நாதா! ஒரு நிமிடத்திற்குள் எனது தேகம் ஒரு வகைப்பட்டிருக்கிறது என்ன செய்வேன் நாதா!

கிருஷ்ணர் விருத்தம்

செந்திரு அன்னமே திங்கள் சிறந்த பன்னிரெண்டில் மேவும்
சித்திரை வைகாசியிரண்டிலும் வசந்த காலம்
சந்தகமானதால் கோப தாபமுமிகவுண்டாகி
கருதி நின்ற செயலென்ன உரைசெய்வாயே

வசனம்

கேளும் பெண்ணே! சித்திரை வைகாசியான மாதமும் வசந்த காலமுமான படியால் உன் மனம் நினைத்த எண்ணத்தை சொல்லும் பெண்ணே.

லெட்சுமி பாட்டு

ஆசையாகினேன் ஐயோ மன்னா அணைய வாரும் மன்னா
ஆசையாகினோன் மன்னா நேசமதாகவே
மாரன் கணை தன்னில் ஊனாகி காமலீலைக்கு (ஆசை)

மன்மதன் கணையால் ஐயோ மன்னா வாடுகிறேன் கணையால்
வஞ்சமில்லாமலே கஞ்சமிழ் சோலையில்
மாயவரே என்மேல் நேசமதாகவே (ஆசை)

வாடிக்காயுதே என்னுடல் மேலும் ஓடிச் சோருதே
வஞ்சமில்லாமலே கஞ்சமிழ் சோலையில்
மாயவரே இங்கு நேசமதாகவே (ஆசை)

மானின் கூட்டங்களால் நாமும் மனநிலை கொண்டதினால்
கானில் பெண்மானும் கலைமான் கடாட்சமாய்
கலவி புரிந்திடச் சிறுமி பிறந்திட (ஆசை)

வசனம்

கேளும் சுவாமி, ! இங்கே புணச்சி செய்கின்ற கலை
மானையும் பெண்மானையும் கண்டு அதுபோல் நானும்
சேரமனமுற்றேன் சுவாமி !

கிருஷ்ணர் விருத்தம்

நாடிய படிக்குத்தானே நானொரு கலைமான் ஆனேன்
வேஷம் கொண்டிடுவாய் பெண்ணே விளங்கிய புள்ளிமானாய்
மருவிய வடிவம் கொண்டு நேசித்து இருப்போம் நாமும்
அப்படியே இருந்து காமக் குறைகளைத் தீர்கலாமே

கிருஷ்ணர் தரு

சிங்காரமாகவே இந்தவனந்தனில் சேருவோம் வாரும் பெண்ணே
இருபேரும் கூடுவோம் வாரும் பெண்ணே

லெட்சுமி தரு

உந்தன் மனப்படி சிந்தை மகிழ்துறவாடுவோம் வாரும் பெண்ணே
காமலீலை மிஞ்சுதே என்ன செய்வோம்

லெட்சுமி

மிஞ்சி தென்றெண்ணி நெஞ்சமுருகிறீர் வஞ்சி நான் இங்கிருக்க
மன்னவா
உந்தன் நெஞ்சமும் ஏன் உருக மன்னவா

கிருஷ்ணர் தரு

உருகினாலும் உன்னை உருமாறிச் சேருவேன் உத்தமி
எந்தன் பெண்ணே
இது வென்ன குற்றமோ எந்தன் கண்ணே.

லெட்சுமி

குற்றமில்லை நான் கூடியணைந்தாலும் சித்தம் மகிழ்ந்துரைப்பீர்
ஓய் ராசனே முத்தி தந்தருள் ஐயனே.

சபை விருத்தம்

மானும் திருமகளும் மானுருவாய்ச் சேர்ந்த பின்பு
சூல் இளைத்யேிவ் வனத்தில் சுந்தரஞ்சேர் புத்திரியை
கோலமுறு வள்ளிக் கொடிதனிலேயீன்று
சீலமுடனே முன்போல் திருவுருவம் தோற்றினாரே

லெட்சுமி தரு

கானகத்தில் வந்தோம் மன்னா கண்காட்சி தீர்தோம் மன்னா
காமலீலை பொல்லாததால் கன்னியரைப் பெற்றேன் நாதா

மறு தரு

வள்ளிக் குளிதனிலே வளர்பிறை மதியது போல்
நழுவிப் புரளுகின்ற மாதரைப் பாரும் மன்னா
அஞ்சிப் பயந்திடாதோ அழுது தவித்திடாதோ
நெஞ்சில் மறக்கலாமோ நேசமுள்ள ஆசை மன்னா

லெட்சுமி வசனம்

கேளும்! சுவாமி இக்காட்டில் பிள்ளை பிரசவித்து
அதனைப் போட்டுவிட்டுப்போவது எப்படி சொல்லும் நாதா

கிருஷ்ணர் விருத்தம்

மங்கை மாதரசே எந்தன் வனிதை மாமணியே கேளாய்
வீணிலே இந்தப்பிள்ளை பிறந்ததென நினைக்க வேண்டாம்
சூரரை அறுத்த வேலர் துணையினால் வேடர் வந்து
மாததை வளர்ப்பார் கண்டாய் சடுதியில் ஏகுவோம்.

கிருஷ்ணர் வசனம்

கேளும் பெண்ணே! இப்பிள்ளையை சுப்பிரமணியர் கிருபையினால் வேடர்கள் எடுத்து வளர்பார்கள் நமது ஊருக்குப் போவோம் வாரும் பெண்ணே.

(காட்சி முடிவு)

## காட்சி இரண்டு

வேலநம்பி தங்கருபன் வரவு

வேலநம்பி விருத்தம்

சிரசிதனிலுறு மாலை கட்டியே கொக்கிறகு
சீர் பெறத் திருத்தி நன்றாய்
திறமான அக்குமணி மாலையொரு சல்லடம்
திகழ் காங்கு கச்சை கட்டி
கரந்தனில் வல்லையம் சில்லாக் கோல் ஏந்தியே
கண்ணி வலை நாய்களுடனே
தரமான தம்பிமார் ஏழுபேர் சூழவே
தனிக் குறவர் கோன் வருகின்றாரே

பாட்டு

வந்தனன் சிங்காரக் குறமன்னன்
மகிழ்தே நடந்து
வாறானே சிங்காரக் குறமன்னன்
மகிழ்ந்தே நடந்து

தங்கருபன்

அந்தமாய் வில்லம்பு கொண்டு
ஆரவாரமாகச் சென்று
விந்தை மான் முயலைக் கண்டு
வேட்டுவன் புனத்தில் இன்று

வேலநம்பி

சுந்தரகாவி என்னுறுமால் சிரசிதனிலை கட்டி
சாய்ந்த கொக்கிற குடனே கலிங்கனும் மிகவே தொங்க

தங்கருபன்

விந்தையாகச் சங்குமணி கழுத்திலும் காதிலுமாய்
கையினில் வில்லம்புடனே கடுக்கனும் காதிலுமாய்

வேல நம்பி

பன்றி மான் முயல் வலை பரிந்துமே எடுத்து கொண்டு
பாரமான சில்லாக்கோலும் கரந்தனில் தானெடுத்து

தங்கருபன்

தம்பிமார் ஏழுபேரும் முன்னும் பின்னுமாகவர
தன்னுடைய சேரியில் வாழ்குறவர் கோனும் வந்தார்

தங்கருபன் தேவாரம்

கார்மதி பொழிய மூன்றும் காவலர் செங்கோலோங்க
சோர்விலா எட்டறங்கள் துலங்கிட சதுர்வேதங்கள்
ஆதிநாவலர் வாழ்ந்த ஆறிருதடந்தோளங்க
பாரமது தழைக்க ஏக பராபரா போற்றி போற்றி

தங்கருபன் வசனம்

சரணம் சரணம் அண்ணா!

வேலநம்பி வசனம்

மிகுதியும் சந்தோசமானேன் தம்பி

வேலநம்பி விருத்தம்

என்னருகிருந்து வாழும் இனிதுள்ள தம்பி கேளாய்
நன்னிலம் சிறந்தென்னாளும் இனிமையாய் வாழ்ந்து வந்தோம்
மன்னவர் புகழும் எங்கள் மாதாவினோடே நாங்கள்
பொன்னகர் சிற்றூர் பொருந்திட பூமியாள்வோம்

வேலநம்பி பாட்டு

வெற்றிக் கொடி புனைந்த வடிவேலர் துணையாலே
சித்தம் மகிழ்வாக நாங்கள் சிறக்க அரசாள்வோம்

தங்கரூபன் பாட்டு

தப்பில்லாமல் அண்ணா தரணிதனை ஆள்வோம்
முத்தி தந்து அருள் செய்திடும் முருகர் துணை நமக்கே

வேலநம்பி

சூரனுடலறுத்த கந்தசுவாமி துணையாலே
கூர்மையுடன் நாமிந்த குவலயத்தை ஆள்வோம்

தங்கரூபன்

காத்தனருளாலே அண்ணா அடவிதனில் போக
வெற்றியுடன் வேட்டையாட வேலர் துணை நமக்கே

வேலநம்பி விருத்தம்

தம்பி நீ தங்கரூபா! தாட்டிதமுடனே காட்டில்
வெம்பி மான் ஏகிடாமல் மிகுவலை வளைத்துக் கட்டி
கும்பலாய்க் கலைத்துக்காட்டில் கோலிய இரைச்சலிட்டு
செம்புலி எனும் நாயைச் சீக்கரம் அழைத்துவாராய்

வேலநம்பி வசனம்

கேளும் தம்பி தங்கரூபா, வேட்டையாடி வரவேண்டும் வலையைக் கட்டி மிருகங்கள் கலையாவண்ணம் காவல் வைத்து வாரும் தம்பி தங்கரூபா!

தங்கரூபன்

அப்படியே செய்கிறேன் அண்ணா!

தங்கரூபன் விருத்தம்

அந்தரத் தமரர் போற்றும் அரி என் அண்ணரான
வேலநம்பிராசன் சொகுசுடன் வேட்டையாட
சந்தி திக்குமே நின்ற வலிமைசேர் தம்பிமார்கள்
சொகுசுடன் காட்டில் சுருக்குடன் நடந்திட்டாரே

தங்கரூபன் தரு

வலையைக் கட்டடா இருப்பு வலையைக் கட்டடா
சாட வாரங்கோ மிருகங்கள் கூடிப்போகுதே
தடியால் அடியாட மிருகத்தை தாவிப்பிடியடா
கலைமான்களும் வந்து இதோ வலையிற் பாயுதே
சிலையை வலையாட இங்கு நின்று சினத்துப் பிடியாட
யானை வருகுதே மதத்துடன் சேனைமடியவே
கானில் மிருகமெல்லாம மிதித்துச சேனை மடியவே

தங்கரூபன் விருத்தம்

இருநிதிக்குறவர் கோனே எந்தையே எந்தையே எங்கட்கெல்லாம்
மதியுறும் தமையணை மன்னனே சொல்லைக் கேளாய்
கருதியே வலையைக்கட்டி கலைத்துமே மிருகமெல்லாம்
வருகிது வேட்டையாட மகாபராக் கெழுந்திடாயே

வசனம்

கேளும் அண்ணா! சகல மிருகங்களை கலைத்து
அதோ பக்கமாய் விட்டு வந்தேன் வேட்டையாப்
போவோம் வாரும் அண்ணா!

வேலநம்பி விருத்தம்

மீறிய வனத்தில் வாழும் மிருகங்கள் அனேகம் சூழ
கூறிய வேட்டைக் கொம்பும் குறித்த மா வில்லும் ஏந்தி
சீறியே முழங்கும் போது தெரிந்து வேடுவர் கண்டு
பேரிகை முழங்க வேட்டைப் பெருக்கமாயாடினாரே

வேலநம்பி பாட்டு

வேட்டைக் கெழுந்தருளினார் வேலநம்பிராசன்
வேட்டைக் கெழுந்நருளி மேவும் தம்பிமாருடன்
காட்டிலுள்ள மிருகமெல்லாம் கண்டதுண்டமாய் வதைக்க
(வேட்டை)

தங்கருபன் பின்னலே செங்கை வில்லம்புடனே
உரத்த மிருக மென்று
சிங்கம் போலே நடை நடந்து
(வேட்டை)

வாழும் வலை தடியும் சூலமும் ஏந்திக் கொண்டு
மலை வனத்தினில் கேளிக்கயாகத்தான் நடந்து
(வேட்டை)

வேலநம்பி விருத்தம்

வாளையும் தூக்கிக் கொண்டு மண்ணும் விண்ணும் தான் அதிர
கோலமாய் வனங்களெல்லாம் குதித்துமே தாண்டி

கால மேகங்கள் போலே கலையுது பாரமய் மான்கள்
சீலமாய் பாணத்தாலே சிதறிடத் துணிப்பேன் பாராய்.

வேலநம்பி பாட்டு

1. வேட்டையாடுவோம் சினத்துடன்
வேட்டையாடுவோம்

2. வேட்டைகள் ஆடுவோம் தாட்டிதமாகவே
காட்டினில் மிருகத்தின் கூட்டத்தினில் நின்று
(வேட்டை)

3. துட்ட மிருகங்கள் வருகிது
துணியில் அம்பை நாணிலில் பூட்டியே
விட்டதைக் கொல்வேன் அல்லாதெனில்
சட்டமாய்க் கொல்வேன்

4. விண்டால் மோதித் தாக்கிறேன் என
இருதுண்டாய் விழத் தாக்கிறேன் என
விட்ட சரங்களும் விண் விண் எனவே
விட்ட சரங்களும் பம் பம் எனவே
மிருகங்கள் கலையா தருகே வருவாய்
ஒரு அம்பிடவே எதிரம்பிடு நீ
வெட்டித் தட்டிக் கிட்டி எறிவேன்
(வேட்டை)

5. முந்தியும் பிந்தியும் முந்தி வருகிது
தம்பி சற்றும் தளராமல் நில்லடா
சாடுகிறேன் அண்ணா சரங்களை விடுகிறேன்
தங்கா திங்கிர்த நடந்த கேசரி
தங்கா தெங்கும் விரைந்துலாவுது
விட்ட சரங்கள் தொந்தோம் எனவே
கண்ட கயப்புலி கம்கம் எனவே
மிருகங்கள் கலையா தருகே வருவாய்
(வேட்டை)

வேலநம்பி விருத்தம்

அவனியில் புகழ்ந்து வேட்டையாடி நாம் வரும்போது
சபனமே கண்டதாலே தன்னிலே வெற்றி பெற்றோம்.
தபனமே மிகுந்ததிப்போ தம்பியே தண்ணீர் கொண்டு
கவனமாய் வருவதற்கு கருதியே நடந்திடாயே

வேலநம்பி வசனம்

கேளும் தம்பி தங்கரூபா! நாம் வேட்டையாடி மிகவும் சந்தோசம் அடைந்தோம் தாகம் அதிகமாய் இருப்பதால் எங்கேயாவது தேடித் தண்ணீர் கொண்டுவாரும் தம்பி தங்கரூபா.

தங்கரூபன் வசனம்

அப்படியே சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன் அண்ணா!

தங்கருபன் தேவாரம்

எந்தையே கதிர்காமத்து இறைவனே
பிராணத் தந்தையே தாயே
எந்தன் தமயனார் தவித்துப் புலம்பி
அயர்ந்து நொந்து தண்ணீர் கேட்டார்
அந்தோ நான் என்ன செய்வேன்
அருங்கானகத்தில் தானே

தங்கருபன் தரு

1. எங்கே நான் தண்ணீர் தேடுவேன் இந்தவனந்தனில்
எங்கே நான தண்ணிதேடி எடுப்பேன் கானகத்தில்
தங்குபுகழ் எங்கள் அண்ணர் தவித்து புலம்புறாரே

2. அண்ணர் தாகத்தினாலே அலைந்து மனம்புண்ணாகினார்
அரனே பராபரனே அருள் செய்வாய் இந்தவேளை
எங்கே நான் தண்ணி தேடுவேன் இந்த வனந்தனில்

3. அந்தரமான காட்டில் இந்த வனமதிலே
தந்தி கரடி புலி மந்தியும் பாயுதே
பாவி நான் இவ்வனத்தில் பார்த்துமே தண்ணீர்தேட
சோதிப்பிளம்பாய் வந்த சுவாமி நீ தண்ணி காட்டாய்
(எங்கே நான்)

தங்கருபன் விருத்தம்

புண்டரியத் திருமகள் ஈன்றதோ
அவனியும் புகழ் சரஸ்வதி ஈன்றதோ
போற்றும் நான் மறைச்சங்கரியீன்றதோ
அண்டர் கோன் மனையாட்டி தாணீன்றதோ
கண்டிலாய் போர்செய்த வந்தினால்
கந்தனே எங்கள் கண்ணுக்குத் தந்ததோ
இன்று தாய் தந்தையில்லாத் தன்மையால்
இச்சணம் தமையனுக்குரை செய்ய வேணுமே

தங்கருபன் பாட்டு

1 இந்தவனந்தனில் இந்தக்குழந்தைதான்
எவ்விதமாய் வந்ததோ
சொந்தமாய்ப் பெற்றிடத் தந்தையும் தாயும்
துணிந்து எறிந்தனரோ

2 தாமரையாசனம் மானபிரமன்
தனது திருமகளே இதை
நாமகளோ இவள் பூமகளோ இதை
நானறியேன் தெய்வமே

தங்கருபன் விருத்தம்

விண்ணவர் வாழ்வையுற்ற விளங்கு நற் குறவர் கோனே
அண்ணலாய் வந்த எங்கள் அண்ணரே சரணம் ஐயா
பண்ணிய தாகம்தீரப் பரிந்துமே தண்ணீதேடும்போது
தண்ணிலத் துதித்த தையலோர் குழந்தை கண்டேன்

வசனம்

கேளும் அண்ணா நீர் சொன்ன பிரகாரம் தண்ணீர் தேடிப் போகும் போது அமிர்தத்தில் உதித்த ஆதிலெட்சுமியை போல் ஒரு பெண் குழந்தையைக் கண்டேன் அண்ணா

வேலநம்பி விருத்தம்

கரடியும் புலியும் வேங்கை கடம்மையோனாய்
வாழும் காட்டில் தெரியவே குழந்தையேது
குறலுரை யென்ன கொள்கையோ அனைபேரும்போய்
தான் செறி குழந்தை தன்னை நாம் அறிகுவோம்

வசனம்

கேளும் தம்பிமாரே கரடி புலி சிங்கம் வாழுகின்ற கொடிய காட்டில் மனுச்சஞ்சாரம் ஏது பிள்ளை வந்தவாரே

வேலநம்பி பாட்டு

1 அறிகுவோம் வாரும் எல்லோரும்
போய் வாரும
அரிய புலி கரடி மான் கள் அமரும் காட்டில்
அரியுருவமாய பிள்ளை அழ நின்றதை
(அறிகுவோம்)

2 கல்லும் புல்லுமாய் எங்கும் கலந்து
நிறைந்த காட்டில்
சொல்லுக்கு புர்வமாய்
சிறுபிள்ளை கண்டதை அறிவோம்

3 காதில் தொங்கணமாலை
பாரிந்திருக்கும் எங்கள்
பாரிட்ட இங்ஙனத்தில் சிறு பிள்ளை கண்டதை
(அறிவோம்)

வேலநம்பி விருத்தம்

சகலதும் அறிந்து நல்ல தம்பி நீ சொன்ன வார்த்தை
இகலதாய் அறிந்து மௌன
எய்தியே பார்தியே பார்கும் போது
பகலெனக் குழந்தை பசியினால் அலறும் காட்டில்
சிசியுருவம் போலே தரணியில் விழுந்தனற்றே.

வேலநம்பி பாட்டு

1 இந்தக் குழந்தை வந்த வாறேதோ என் தம்பிமாரே
ஈசன் நமக்குயீந்தருளினரே என் தம்பிமாரே

2 அந்தமாகிய இந்தக்குழந்தையை என் தம்பிமாரே
ஆரும்காணாதிருந்ததருமையே என்தம்பிமாரே

3 சொந்தமாய்ப்பிள்ளைக்கொருவர் இல்லையே என்தம்பிமாரே
பயந்த மனமும் தரிக்குதில்லையே என்தம்பிமாரே

4 விந்தைமலர்வாய் திறந்தலறுதே என்தம்பிமாரே
விதிக்கு நானும் மனம் மகிழவே என் தம்பிமாரே

5 என்ன மாதவம் புரிந்திருந்தோமோ என் தம்பிமாரே
ஈசன் நமக்கீந்தருளினரோ என்தம்பிமாரே

6 அன்னமே குயிலான அமிர்தமே என்தம்பிமாரே
அழுதிடாமலே அமரும் சுகிர்தமே என் தம்பிமாரே

7 வண்ணமாமயிலே குயிலே தாருவே என் தங்கையாரே
வாய்விடாமலே அமரும் தாராவே

8 மானின் வயிற்றில் கருத்தரிக்கவே இதைச் செய்த நாதன்
வன்மையாகவே என்றும் காக்கவே

9 தேனேறும் விழியுறங்க பிள்ளைக்கு சாவேரிராகம்
தினமதாகவே பாடும் தங்கைக்கு

வேலநம்பி விருத்தம்

கந்தனார் அருளினாலே அரிவைமான் ஈன்ற கன்றை
வைத்து நாம் வளர்ப்பதற்கு வள்ளி எனும் நாமம் இட்டேன்
உத்தமமாய் உலகினோர்க்கு அறிவித்து விருந்து செய்ய
பத்தினி தன்னையிங்கே பரிவுடன் அழைத்திடாயே

வசனம்

கேளும் தம்பி தங்கரூபா! இந்தக் குழந்தைக்கு
வள்ளி என்னும் நாமம் இடடேன் இதை வளர்ப்பதற்கு
நமது தாயாகிய செவிலி அம்மாளை அழைத்து
வாரும் தம்பி தங்கரூபா

(காட்சி முடிவு)

# காட்சி மூன்று

செவிலி வரவு விருத்தம்

கங்கலை கடித்த கூந்தல் கடிமலர் சூடி வானோர்
திங்களில் பொட்டும் சிறக்கவே அணிகள் பூண்டு
பங்கய முகமிலங்க பரிதி வந்துதித்தாற் போலே
செங்கையில் குறிக்கோல் கொண்டு செவிலியும் வருகின்றாளே

செவிலி பாட்டு

1 நளின மலர் வதன அதித சுகிர்தமுள்ள
மாது செவிலியும் வந்தாளே

2 பங்கய முகமிலங்க செங்கை வளை துலங்க
நங்கை நபியம் கொண்டெங்கும் அழகொளிக்க (மாது)

3 கும்பஸ்மனத்தின் மீது வம்பு தவித்திடவே
நம்பும் இணையும் மனம் வெம்பித்தவிர்த்திடவே

4 தொண்டைச் சுருக்கில் வண்டு செந்தக்கீதங்கள் பாட
அண்டி மலைக்குறவர் களிகூர்ந்திடவே (மாது)

5 சங்கு மணிக்கழத்தில் திங்கள் எனச் சொலிக்க
நெற்றியில் திலகம் எங்கும் அதிகரிக்க (நளின மலர்)

செவிலி விருத்தம்

நல்லதோர் குறவர்க்கெல்லாம் நராதிபயாக வந்த
செல்வனாம் ஏழுபேரில் சீருள்ள புதல்வா கேளாய
வல்லமையாக உங்கள் செய்தி மகிழ் சபையில் என்னை
இங்கெனை அழைத்த செய்தி இன்னதென்றுரை செய்வீரே

செவிலி வசனம்

கேளும் மகனே! என்னை அழைத்த காரியத்தை என்னவென்று செல்வீராக.

வேலநம்பி விருத்தம்

அருமையாய் எனது சொந்த அன்னையே சொல்லைக் கேளாய்
உரிமையாய் வேட்டைக்கேகி உன்னிய குழந்தை ஒன்று
பதுமையாய் கண்டெடுத்துக் கடுகியோ கொண்டு வந்தோம்
வறுமைகள் தீர நன்றாய் வளர்த்திடும் வள்ளிமாதை

வசனம்

கேளும் தாயே! வேட்டைக்குப் போன இடத்தில்
ஓர் அழகிய பெண்குழந்தையைக் கண்டெடுத்து
வந்தோம் நீரும் பெண்பிள்ளை இல்லாததால் வைத்து
வளர்த்துக் கொள்ளும் தாயே!

செவிலி தரு

1. என்னுடைய மைந்தர்களே இந்தச் சிறு குழந்தைதனை
எவ்விடத்தில் கண்டெடுத்தீர் ஒவியத்தை மக்காள்
இளவெயில் அழகுறு குழந்தையில் மகவை
தகமையுடன் எனக்குச் சாற்றிடுவீரே

வேலநம்பி தரு

2 கந்தமாய் குழலுடைய என் தாயே அம்மா
கானகத்தில் கண்டெடுத்தோம் என்தாயே அம்மா
கானகந்தனில் களிப்போடு தாயே அம்மா
மானிதை யீன்றது வளர்திடும் தாயே அம்மா

செவிலி தரு

3 விந்தைசெறி இந்தப்பிள்ளை
அந்த வனம் மீதில்வர
வேண்டியவாறேது எனவே
வீளம்பிடுவீர் மக்காள்

வேலநம்பி தரு

4 வந்தவகை ஏதோதறியோம் இந்த மகவைமானும்
ஈறதாகக் கண்டெடுத்தோம் என் தாயே அம்மா
சொந்தமாகிய இலங்கும் இன்னாளை
தங்கையை வைத்து தயவுடன் வளர்ப்பீர்

செவிலி தரு

5 மான் வயிற்றில் மானிடப் பெண் வந்தவகை எந்தனக்கு
வகையுடன் உரைப்பீர் மைந்தர்களே மக்காள்
மானிது ஒரு மாயமதாகவே
தனியிது வருவகை சாற்றிடவே

வேலநம்பி தரு

6 வண்ணமயில் மீதில் வரும் மால்மருகன் ஆனகுகன்
அவர் வைத்துப் பாதுகாக்க வரம் தருவார் அம்மா
தாயே
மாதரசாகிய இந்த மகவை
போதவராய் வைத்துப் புகழுடன் வளப்பீர்

செவிலி தரு

7 நேசமுடன் பேசுகின்ற ஆசை மைந்தர்களே
நீங்கள் நிட்சயமாய் எந்தனக்கு நீர் உரைப்பீர் மக்காள்
நிறமது மகமுடன் நிற்கனரூபி
குறைவில்லாதவகை பரமர் அருள் உண்டு

செவிலி அகவல்

மன்னனே கேளாய் மாவனந் தன்னிலே
முன்னமே நாங்கள் முயன்றிடும் தவத்தால்
குறித்துமே ஓர் பெண்குழந்தையை வேண்டி

வருத்தமாய்ச் சிவனருள் வடிவேலரையும் வேண்டி
காவனம் வந்த கன்னிமார்களையும்
தாவியே வணங்கித் தாளினைத் தொழுது
பேருடனே நான் பிள்ளைகள் இருக்க
கூறிய துணைப்பெண் குழந்தை தந்திடுவாய்
என்று நான் புலம்ப என் மொழி கேட்டு
தன்னிலே நமக்காய்ச் சப்த கன்னியர்கள்
வந்து தான் அன்று வறுமைகள் தீர்த்து
இந்த மாவனத்தில் ஈஸ்வரன் செயலால்
மானது வயிற்றில் பெண்மதலையுண்டாக
பான்மையாய் நீரும் பரிவுடன் உரைப்பீர்
எடுத்ததை வளர்பீர் எனக் கன்னிமார்கள்
கொடுத்திடும் வகையால் கொண்டனர் அப்போ

பிரபா கற்கணையால் பிரமாணிபம் பதித்து
வள்ளியின் கொடியில் வகையதுவாக
கண்மணிக் குழந்தையைக் காட்டினில் நாமே
பூரணமாகப் பொலிவுறக் கண்டோம்
ஆனதால் நமக்கு அரனருள் குழந்தையை
தானியமென்றோ தழுவியே வளர்போம்.

செவிலி விருத்தம்

தேவர்கள் குறைகள் தீரச் செய்யதோர் குகன் பிறந்தான்
ஆவலாய் எனது துன்பம் அகற்றிட வள்ளி வந்தாள்
பாரினில் இந்தப் பரிசனம் அறியத்தானே
நாவினாற் புகழ்ந்து நானும் நவின்றுதாலாட்டுவேனே

செவிலி தாலாட்டுப் பாட்டு

1 ஆரிரராராரோ ஆரிரா ஆரிவராராரோ
பாரிலுள்ளோர் புகழ வந்துதித்த
பாவையே கண்வளராய்

2 ஏழுபேர் மகிமையினால் பெண்பிள்ளை
இல்லாத பாவி என்று வளர்த்தேன்

குறவர் முன்னே வந்துதித்த மானே
நீ கண்வளராய்

3 மண்டலத்தோர் மகிழ விண்டத்தோர்
வேண்டித்துதிகள் செய்ய
கொண்ட ராகம் இனதாய்ப்பாடவந்த
ஏந்திழையே கண்வளராய்

4 மங்கை மதலை யென்று வயிற்றில்
மதிலையுமாய் உன்னை
திங்கள் இனிதம் என வந்துதித்த
தேனே நீ கண்வளராய்

வேலநம்பி விருத்தம்

என்னிட தம்பியாக இருந்திடும் தங்கரூபா
முன்னமே யுழுது நன்றாய் முடுகியேதினை விதைத்தோம்
தன்மையாய்ப் பார்த்த பேர்க்கு தனிக்காதிரான தொல்லை
பண்ணுதாய் முழுதும் விளைந்ததோ அறிந்து நீசொல்வாய் தம்பி

வசனம்

கேளும் தம்பி தங்கரூபா! காட்டை வெட்டித்தினை விதைத்தோம்
அதில் விளைந்த நெல்லையும் விளையாத
கொள்ளையையும் பார்த்து வாரும் தங்கரூபா

தங்கரூபன் விருத்தம்

மகிழ்பெறு குறவர்கோனே மன்னனேவழுதிகேளாய்
அகமகிழ்ந்தங்கு நாங்கள் அணுகியே தினை விதைத்தோம்
கானகம்தன்னில் வேட்டை கடுகியதாலே பட்சி
கனகதாய் கதிரைக் கொய்து அழிந்திடவுமாச்சே

தங்கரூபன் வசனம்

கேளும் அண்ணா! கானகத்தில் வேட்டை நெருங்கியாடியபடி யால் பட்சி சாதிகள் கதிர்களை அழிவு செய்கின்றதே அண்ணா

வேலநம்பி விருத்தம்

மனமதாய் வேட்டையாடிய போது கண்ட
மானினு மினிய மாது வண்ணமாய்பயின்ற தங்கை
தேனென வளர்ந்தோம் நாமே அரிவைக்கு வயதென்னாச்சி
தானதை அறிந்திருந்தால தம்பி நீ சாற்றுவாயே

வசனம்

கேளும் தம்பி தங்கரூபா! காட்டிலே கண்டெடுத்து
வந்த குழந்தைக்கு வயது என்ன ஆச்சுது சொல்லும்தம்பி

தங்கரூபன் விருத்தம்

தெரிந்திட உரையுமென்ற செயலுள்ள குறவர்கோனே
வருந்தியே நாமின்னேரம் வளர்ந்தனம் பதுமைபோல

பரிந்திடும் வள்ளிதங்கை பாவைக்கு வயதீராறும்
அறிதிடும் கணக்கிதையா அறிந்ததை உரைசெய்தேனே

வசனம்

கேளும் அண்ணா நமது தங்கைக்கு வயது பன்னிரெண்டாகி
விட்டது அறிந்து கொள்ளும் அணணா

வேலநம்பி விருத்தம்

கரியாமல் மருகனை கந்தனும் கிருபை வேண்டி
அரிவை மான் ஈன்ற கன்றை அமையை அழைத்து நீயும்
உரிமையாய் அலங்கரித்து உன்னிட தோழியோடு
பிரியமாய் அழைத்து வாராய் பெருமை சேர் தம்பிமாரே

வசனம்

கேளும் தம்பிமாரே! வள்ளி நாயகியைத் தோழிமாருடன்
அழைத்து வாரும் தங்கை தங்கரூபா

(காட்சி முடிவு)

## காட்சி நான்கு

வள்ளி வரவு விருத்தம்

விற்பன சூழ் செந்திவடி வேலவர்க்காய் மான் வயிற்றில்
பொற்பெனவே வந்துதித்துப் புனக்குறவர் வீடு சென்று
சொற்பனவே வாழும் வள்ளி சுகிர்தமிகு கற்புடைய
அற்புதன் சேர் எங்கள் வள்ளியம்மையிதே வந்தனளே

வள்ளி தரு

1. வந்து நிற்கிறேன் வேலா ஒரு மனிதர் இல்லையே பாலா
மாமணக்கிது பூமணக்குது வடபழனியிலே
மடத்தை சுற்றியே அன்தானங்கள்
நித்தம் படைப்பார்கள

2 .தேன் மணக்குது தினை மணக்குது
செல்வப் பழனியிலே
தெருவைச் சுற்றியே அன்னதானங்கள்
நித்தம் படைப்பார்கள்

வள்ளி மறு விருத்தம்

மதியின் உயர் முனிவர் அதிகமையல் பெருகு
திரு மனதுருகி அடி பணிந்திடவே
ஆதி சூத விரத நபி நயன மிகு அறியாத
அமிர்த குண சரச மயிலான்
துதி புரியும் மனதினிடை அது
அழகமெனப் பணியும் தோழியோடு
பதிகுறவர்:எழுதமயன் மொழி தவருதென
வள்ளி பாவையும் கொலுவந்தாளே

பாட்டு

1. மாது வள்ளியும் வந்தாளே -நல்ல
வனத்திலேகியே குற மன்னன்
வேலநம்பி முன்னே
மாது வள்ளியும் வந்தாளே

2. மாது வள்ளியும் வந்தாள் -மயில்
அன்னம் போல் நடந்து
மாதவத்தால் வந்து வள்ளி கொடிதனிலே
சேமமுடன் வடிவேலர் நிகர்வு கொண்டு(மாது வள்ளி)

3. முல்லை மலரால் கழுத்தில் -நல்ல
முத்து மாலை கொத்துச் சரம் மார்பில் பதக்கமின்ன
முல்லை மலராள் வஞ்சி மொழியும் கிளிபோற் கெங்சி
மூடு கம்மல் தோடு வாளியாடிடும் பதக்கமின்ன
நாடிடவே நடந்து சேடியர் கூடி வர-(மாது)

4. முத்து மூக்குத்தி மின்னவே - நல்ல
முல்லையரும்பினோடு பல்லை நிகர்த்த விளி
முத்து மூக்குத்தி மின்ன
முன்னங்கை விளியில் துன்ன

5. சித்திரச் சிலம்புபாட :செம்பொன்
பதக்கம் மின்ன
அஸ்த்த தடகம் மின்ன
ஆறுமுகனைத் தொழுதிட (மாது வள்ளி)

**வள்ளி விருத்தம்**

இரு நிதிக் குறவர் கோனே தீரனெ சில்லாக் கோனும்
பெருமையாய் வளர்த்த எங்கள் பெரியதோர் அண்ணை போற்றி
உரிமையாய் வளர்த்து அந்த உன்னிய தோழியோடு
வருவீர் என்றழைத்தீர் நீர் உணர செய்வீரே

வள்ளி வசனம்

சரணம் சரணம் அண்ணா குறவர் கோனே! என்னைத் தோழிய ருடன் அழைத்த காரியம் என்னவென்று சொல்லுங்கள் அண்ணா!

வேலநம்பி விருத்தம்

செல்வமே தேனே எந்தன் சிகாமணி வள்ளி மானே
நல்லதோர் தினைப் புனத்தில் நாடிய பரணின் மீது
பல மிருகப் பட்சி பரிந்துமே கதிருண்ணாமல்
வில்லோடும் கவுணுமேந்தி மிக வருந்திகாவல் காப்போம்

வேலநம்பி வசனம்

கேளும் தங்கையே! தினைபுனத்தில் கதிர்களைப் பட்சிகள் அழிவு செய்கின்ற படியால் நீரும் உன் தோழிமாரோடு போய்க் காவல் செய்யும் தங்கையே.

வள்ளி பாட்டு

காத்திடும் என்றுரைத்தீர் தமையனாரே
கனபுலி வாய்விட முன்
அதைப் பார்த்துயிர் விடும்போது கவுண்வில்
பரிந்தென்ன செய்யுமதோ

வேலநம்பி பாட்டு

சொல்வது கேள் தங்கையே வடிவேலரை
சிந்தைதனில் நினைந்து
வைத்துக்கவுண் எறிந்தால்
மிருகங்கள் வாய்விட்டலறிடுமே

வள்ளி பாட்டு

அலறும் கடம்பை பன்றி தமையனாரே
அணுகும் தினைப்புனத்தில்
நாங்கள் பலதிக்கிலும் எறிந்தால்
கவுண் வில் பரிந்தென்ன செய்யுமதோ

**வேலநம்பி பாட்டு**

அன்னமே தாராவே பெண்பேரில்
அழகிய வள்ளியரே
பண்ணும் சடாச்சாரத்தை நினைத்தால்
பல திக்கிலும் சென்றிடுமே

**வள்ளி பாட்டு**

மிரட்டு மிருகங்களை கண்டிக்க
மிக மந்திர முரைத்தீர்
காட்டில் மதம்போல் யானைக்கூட்டம்
வந்தால் அதைக்காக்க வகை செய்வீர்

**வேலநம்பி பாட்டு**

வகைகேளும் மதயானை வந்தால்
வடிவேலர்க்கபயமென்றே
பகையாறக் காருமென்று பணிந்திட்டால்
பல திக்கிலும் சென்றிடுமே

**வள்ளிப்பாட்டு**

சென்றிடும் என்றுரைத்தீர் தமயனாரே
அணுகும் தினைப்புனத்தில்
பண்டுதவசி முனிவர் வந்தார்
என பாலிப்பம் செய்யுமதோ

**வேலநம்பி பாட்டு**

பாலிப்பதேன் தங்கையே தவசியார்க்கு
பட்சணம் ஈந்தனுப்பும்
வாலிபர் முருகேசர் மேலே காம்போதிராகம்
வன்மையாய் பாடிக்கொள்ளும்

**வேலநம்பி வசனம்**

கேளும் தங்கையே! வடிவேலரை துதி செய்து கொண்டு
தோழியாரோடு சொல்வாய் செழுந்தேனே
தினைப்புனத்தில் காவல் செய்யும் தங்கையே

தோழி பாட்டு

கன்னல் மொழி மின்னரசே காரிகையே
சொல்லிடக் கேள்
உன்னை அண்ணர் வரவழைத்த செய்தி

வள்ளி தரு

சொல்லுகிறேன் தோழிமாரே சுந்தரஞ்சேர்
எங்கள் அண்ணர்
வில்லோடு கவுணுமேந்தி மிகு
தினைப்புனம் காரும் என்றார்

தோழி பாட்டு

காத்திடப் புனத்தில் சென்றால் கடிய
மிருகம் உண்ணும்
காத்திட வகையறியோம் சித்திரமே
மானே தேனே

வள்ளி பாட்டு

சித்திர கவுண் எறிந்து சிறந்த
புனத்தில் நின்று
பத்திரமாய் காப்போம் வாராய்
பாங்கியரே தோழிமாரே

வள்ளி விருத்தம்

செல்வமாய் எனை வளர்த்த சிறந்த தாயே கேளாய்
வல்லமையான அண்ணர் மகிழ் தினைப்புனம் கார் என்றார்
வில்லொடு கவுணுமேந்தி மிக மந்திரமும் சொல்லி செல்
தினைப்புனமே
சொல்லினர் போய் வாறேன் நான்

வள்ளி தரு

சோதி சேர் புனந்தனிலே என் தாயே அம்மா
வாது செய் அண்ணர் சொன்னார் என் தாயே அம்மா

நீதியாய் நான் போவதற்கு என் தாயே அம்மா
நேரிழைக்கு விடைகொடுப்பாய் என் தாயே அம்மா

செவிலி பாட்டு

என்னிரு கண்போலே வந்த என்மகளே வள்ளி
ஏகியங்கே பாதுகாப்பாய் என் மகளே வள்ளி
தெறித்திடுவாய் சுண்டுவிரலால் என் மகளே வள்ளி

வள்ளி பாட்டு

புனமதிலே சென்று நானும் என் தாயேஅம்மா
புகழுடனே காவல் செய்ய என் தாயே அம்மா
இருப்பார்களோ எனக்கியம்பும் என் தாயேஅம்மா

செவிலி பாட்டு

எனக்கினிய கண்மணியே மகளே வள்ளி
அருந்தினைமா உண்டிடுவாய் உன்மகளே வள்ளி
மனக்கவலை இல்லாமலே என்மகளே வள்ளி
மகிழ்வுடனே சேர்ந்திருப்பாய் என்மகளே வள்ளி

வள்ளி பாட்டு

6 பாங்கியர்கள் அங்கிருந்தால் என்தாயே அம்மா
பட்சிகளை விரட்டிடுவேன் என்தாயே அம்மா
தாங்கு பசிவந்ததினால் என்தாயே அம்மா
நேசமங்கே ஓதிடுவாய் என்தாயே அம்மா

செவிலி பாட்டு

7. தாங்குபசி வந்ததினால் என்மகளே வள்ளி
தயவுடனே தேன் தீனைமா என்மகளே வள்ளி
பாங்குடனே உண்டு நீரும் என்மகளே வள்ளி
பரிவுடனே காவல் செய்வாய் என்மகளே வள்ளி

வள்ளி பாட்டு

8 அன்னையே என் ஆதரவே என்தாயே அம்மா
யானை புலி சிங்கம் வந்தால் என்தாயே அம்மா
என்ன செய்வேன் அப்பொழுது என்தாயே அம்மா
எப்படிப் புனத்தில் நிற்பேன் என்தாயே அம்மா

செவிலி பாட்டு

9 அன்னநடை தெள்ளமுதே என் மகளே வள்ளி
யானை புலி சிங்கம் வந்தால் என்மகளே வள்ளி
வண்ண மயில் வாகனமே என்மகளே வள்ளி
மனதில் நினைத்திடுவாய் என்மகளே வள்ளி

வள்ளி விருத்தம்

அருமையாய் எனது சொந்த அன்னையே சொல்லக் கேளாய்
தெரிவையான் புனத்திற்கேகிச்சீராறு பரணில் ஏறி
வருமிருகப்பட்சி வராமல் வகை செய்வேன் நான்
பெருமையாய் விடைதந்தென்னைப்பிரியமாய் அனுப்பிவீரே

வசனம்

கேளும் அம்மா! தினைப்புனத்திற்கு போய்க்காவல் செய்ய விடைதாரும் தாயே

செவிலி விருத்தம்

வண்ணமாம் மயிலின்மீது வரும் முருகையனைத் தான்
உன்னியே மனதில் எண்ணி உவப்புடன் போற்றி செய்து

கன்னியர் கூடிக்காவலாய்ப் புனத்துக் கேகி
கண்ணியமாகப் போவாய் நங்கையே வள்ளி மாதே

செவிலி வசனம்

கேளும் மகளே! முருகையன் கிருபையினால் ஒரு ஆபத்தும் வராது போய் வாரும் மகளே

செவிலி தரு

1 ஐயோ நான்பாவிபிள்ளை வளர்த்த பலனிதுவோ
உன்னைக் காத்த பலனிதுவோ நானும் ஏந்தி வளர்த்த பலனிதுவோ

2 மல்லிகை முல்லை நல்வாசம் பொருந்திய வஞ்சியே வள்ளியரே
கொல்லைத் தினம் புனம்காக்க நினைவு கொண்டு நடந்தாயோ மகளே

3 முத்து வரிசையும்சித்தமுடையதோர் மோகன வள்ளியரே
சிற்றூர் குறுநிலமன்னர் தினம் புனம் சேரவும் வைத்தாரோ வள்ளியரே

4 மானின் வயிற்றில் வந்து பிறந்த மதலையும் மானனையே மகளே
ஈனமில்லாமல் வளர்ந்தேன் எனக்கிடர் வருவானே

5 வையகம் தன்னிலே மைந்தர்கள் ஏழுபேர் தனை மகிழ்ந்து பெற்றேன்
தையலோர் பெண்பிள்ளை வேணுமென்றெண்ணித் தவங்கள் மிகப்புரிந்தேன்

6 என்ற பகைதனில் என்றலைமீதினில் என்னிடவா மகளே
சென்று மிருகம் துரத்திரக் கட்டளை சொல்லியும் விட்டாரே.

7 அன்னநடையும் உடையும் இடையும் சிறகையும்
அழகொளிக்க. வள்ளிதினைப்புலம் காத்திடவைத்தது
மாலையன் சோதனையோ.

8 என்னைப்போல் ஏந்திழைமாரேயிந்தத்துயர்
ஆருக்குத்தான் வருமோ. தெரியாப்பொன்னைப்போல்
வள்ளியின் நினைவு பொறுக்கவும் கூடுதில்லை

9 கந்தர்வளம் முருகேசா் உனது பாதம் காப்பாய் என்
மகளை சிந்தாவரம்தர முகுந்தா சிவன்பாலா சேவடி
தாழ்துணையே

செவிலி வசனம்

அரகரா ஆறுமுகக் கடவுளே! எனது மகளுக்கு ஒரு ஆபத்தும் வராமல் அருள்புரிய வேனும் சுவாமி

தோழி விருத்தம்

அன்னமே சொல்லக் கேளாய்அண்ணலாம் குறவா் கோனும்
சொன்ன சொற்படியே நாமும் தோகையை புனத்தில் சென்று
வண்ணமாம் பட்சி சாதி வளர்தினைக்கதிர் அழியாவண்ணம்
முன்னையே சென்று காப்போம் முருகையன் அருளினாலே

தோழி வசனம்

கேளும் அண்ணி! அண்ணன் மாரானவர் சொற்படி புனத்தை நாடிச்செல்வோம்வாரும் அண்ணி

தோழி பாட்டு

உரைப்பீர நீர் என்று சொன்ன ஒண்ணுதலைப் பெண்ணரசே
திருக்கை வேலர் பாதம் செயமுண்டு வாருமம்மா

வள்ளி பாட்டு

தத்தை மெழியினாளே தனி வேல் விழியினாளே
சித்தம் மகிழ்வாய் தினைப்புனம் சேர்வோம் வா்ராய்

தோழி பாட்டு

சேர்வோம் நாமென்று சொன்ன தேன் பொழி வள்ளிமாதே
அல்லி மலர்கள் நன்றாய் அலர்ந்ததை பாருமங்கே

வள்ளி பாட்டு

பாராய் நீ என்று சொன்ன பாங்கான தோழிமாரே
வாராய் தடாகம் தன்னில் தணித்திடுவோம்

தோழிப்பாட்டு

தாகம் தணிவோம் என்ற தையலே பெண்ணரசே
பூக மரத்தின் கிளி புகழ்வதைப் பாரும் அம்மா

வள்ளிப் பாட்டு

பாராய் நீ என்று சொன்ன பாங்கியர்களே கேளும் தயவாய்
அமிர்தம் போலும் திவ்விய புனலை உண்ணும்

தோழிப்பாட்டு

புனலுடன் மாத்திரத்தில் புனமும் தெரியுதம்மா
அன்னநடை பெண்ணரசே அருகில் கடந்து வாராய்

வள்ளிபாட்டு

அருகினில் வாருமென்று அன்னம்போல் பாங்கிமாரே
இரு நிதிக்குரவர் கோன் செய்த புனமிதுவோ

தோழிபாட்டு

யானைப் பிடி நடை அதிக துடியிடையே
சேனைப் புனைக்குரவர் நன்றுச் செய்த புனமிதுவோ

வள்ளி வசனம்

கேளும் தோழிமாரே! தமையன் சொற்படி பட்சிகள் அழிவு செய்யாது பாதுகாப்போம் வாரும் தோழிமாரே

தோழி மறுதரு

வள்ளிக் கொடியணங்கேவருவீர் வழிநடப்போம் அம்மா தாயே
வெள்ளிக் கவுண்பிடித்து துள்ளிப் புனம் காப்போம் அம்மா தாயே

வள்ளிதரு

அச்சமில்லாமலே என் சேவை புரிந்திடும் பாங்கிமாரே - நாம்
ஆடிச்சோபனம் சொல்லிக் கூடிப் புனம் காப்போம் அம்மா தாயே

தோழி தரு

தாகமெடுக்கி தவிப்பிழைப்பாகுதே அம்மா தாயே
தாமதம் செய்யாமல் தையலரே வாரும் அம்மா தாயே

வள்ளி தரு

நடந்து வருவீர் குளமொன்று தோணுதே பாங்கிமாரே
தொடர்ந்து போய் நீர் அருந்தி தனிவழி போகையில் அதில் பாங்கி மாரே

தோழி தரு

தாகம் அறிந்து தனிவழி போகையில் அம்மா தாயே - இப்போ
மாங்குயில் பாடுதே மயில் அன்னம் ஆடுதே அம்மா தாயே

வள்ளி தரு

அந்தா தெரியுதே அண்ணர் திணைப்புனம் தோழிமாரே -நாம்
ஆதரவாய்ச் சென்று பார்த்துக் காப்போமடி பாங்கிமாரே

தோழி தரு

அண்ணர் வேல நம்பி சொல்மொழி தப்பாமல் அம்மா தாயேநாம்
ஆடிப்பாடியோடிக் கூடிப்புனம் காப்போம் அம்மா தாயே

வள்ளி வசனம்

கேளும் தோழியாரே! அண்ணர் சொல்படி திணைப்புனம் காப்போமடி தோழிமாரே

வள்ளி விருத்தம்

அணுதுரும் பரணின் மீது அண்ணலாம் குறவர் கோனும் திவ்விய மந்திர முரைந்து தானவள் கவுண் வில்லேந்தி துணிந்துமே வள்ளித்தேவி தோழிமாருடனே கூடி பணிந்தங்கு நிற்கும் போது பட்சிகள் விரட்டலுற்றாள்.

வள்ளிப் பாட்டு

01. ஆவினங்காள் அகலுவீர் குருவினங்காள்
நேசமான திணைக்கதிரையுண்ணவே
நிறைந்து நீங்களுடன் கலந்துண்ணவே
வாயால் யாற்றி என் மனது நோகுதே,
வாங்கின் காவுணால் எறிகிறேன் ஓடிப்போ
(ஆவினங்காள்)

தோழிப் பாட்டு

02. கொண்டலாத்துச் செம் கொத்திப் புறாவன்னம்
கொழுத்த காடை கௌதாரி நங்கணம்
நின்ற சிட்டு கிடைக்கலாமா மென்ன
நேரியவில்லால் அடிப்பேன் நான் ஓடிப்போ
(ஆவினங்காள்)

வள்ளிப் பாட்டு

03. கோலம் பெரு வல்லாரி தூக்கணம்
கொண்ட சிறகை· வானம்பாடி யேற்கவே
வானுக்குருவி கால்யாணி வணங்கவே
வாங்கிக் கவுணால் எறிகுவேன் ஓடிப்போ
(ஆவினங்காள்)

தோழிப் பாட்டு

04. கொஞ்சிய அன்னம், புறா, மயில், நாரைகள்
கொழுத்து காடை கௌதாரி நங்கணம்
மிஞ்சிய கூட்டத்துடன் நீங்கள் எல்லோரும்
வெருண்டு ஓடவே வில்லால் அடிக்கிறேன்
(ஆவினங்காள்)

வள்ளிப் பாட்டு

05. சரவண சண்முகனைத் துதிசெய்யவே
சண்முகனைத்தேடி என் மனம் உய்யவே
இரவும் பகலும் என்றறியலாமே
என் நேரம் பார்த்தாலும் ஈதே அலுவலாய் (ஆவினங்காள்)

தோழிப் பாட்டு

06. சினைந்து வந்து புனத்தையழிக்கிறீர்
சேனையாருடன் கூடிக் கொதிக்கிறீர்
இனத்தை தேடித் தேடிச் செடியில் ஒளிக்கிறீர்
இப்போது என்கையால் அழியப் போகறீர் (ஆவினங்காள்)

வள்ளிப் பாட்டு

07. அமிர்த குண சண்முக முருகனைத் தேடியே
அனுதினம் என்மனம் உருகியே வாடுதே
அமிர்த கல்யாணி ராகம்பாடியே
இரக்கமில்லாமல் வில்லால் அடிப்பேன் ஒடி (ஆவினங்காள்)

தோழிப் பாட்டு

வஞ்சகமில்லாமல் உங்களை நான் சொல்ல
மனத்திரங்காது இரும்பது கல்லோ
பஞ்சையோ வில்லு கவுண் என்ன சில்லோ
பற்றித் தொடுகிறேன் ஓடுங்க நான் சொல்ல (ஆவினங்காள்)

**(காட்சி முடிவு)**

நாரதர் வரவு விருத்தம்

சிரத்தினால் சிறந்த நல்ல திருமுடி புனைந்து செய்ய கரத்தினால் வீணைதண்டு கமண்டலம் எடுத்துக் கொண்டு உரத்தினில் பூநூல் ஒளிரவே வரத்தனில் பெற்ற நான் சுகிர்த நாதர் வருகின்றாரே.

நாரதர் பாட்டு

1. நாரதர் வந்தாரே மகரிசி நாரதர் வந்தாரே
நாரதர் வந்தாரே பூரணமாகவே
தாரணிமேற்களும் தழைத்து விளங்கிட (நாரதர்)

2. பையப் பைய நடந்து பதுமை மொழிகள் பேசி
வெய்யவன் குலத்துக்கெல்லாம்
விந்தைகள் உபதேசிக்கும் (நாரதர்)

3. அட்டமா நகர்களும் எட்டும் திக்கிட
திட்டமதானதினப்புனம் சொல்லவே
நாரதர் வந்தாரே மகரிசி நாரதர் வந்தாரே

நாரதர் வசனம்

ஆகா இது நந்தவனமோ நதிக்கரையோ பூங்காவனமோ வினோதமாய் இருக்கின்றதே இங்கே வீசு தென்றல் காற்றும் அசைந்தாடுகிறதே இதைப் பாதுகாக்கக் கூடிய பெண்ணானவள் ஆதிலெட்சுமியோ சரஸ்வதியோ கையில் வெள்ளிக் கவுண் ஏந்தி இரு சகிமாருடன் பட்சிகளைத் துரத்தி நிற்கிறாள் சற்றே அவ்விடத்தில் சென்று பார்ப்போம் நாராயணா!

நாரதர் தரு

ஆரம்மா நீ சொல்லுவாய் புனம் காக்கும்
அதிசயம்தனைச் சொல்லுவாய்
மாதே உந்தனைப் பெற்ற தாய்போல் எனக்குச் சொல்வாய்
இந்த தினைப் புனத்தில் இயல்பாக வந்தேன்.

நாரதர் கொச்சகம்

வண்ண மடமயிலே வானுலகில் நானிருந்து இன்னலத்தைப் பார்க்க வென்று இவ்வழியாய் வந்தேனே நன்மை தரும் சாஸ்திரங்கள் உள்ள தெல்லாம் உன்னிதமாய் கேட்பவர்க்கு உள்ளபடி சொல்வனே.

நாரதர் வசனம்

கேளும் பிள்ளையே! நான் தெய்வலோகத்திலிருந்து நூலேணிவிட்டு அதே வழியாய்ப் புலோகத்தின் அதிசயம் பார்க்க வந்தேன் யாராவது வருங்காலம் செல்காலம் நிகழ்காலம் இப்படிப்பட்ட இருவகைகளில் உள்ள பலாபலன்களை கேட்டால் என்னால் அறிந்த வகை சொல்வேன் பிள்ளையே

வள்ளி விருத்தம்

ஆரிய முனியே எந்தன் அகந்தனில் ஒன்றைநாடி
பாரிய நிலவு கொண்டு பரதவிக்கின்றேனே
காரியமாகவந்து கைகூடும் கூடா தென்று
கூரிய மனதாரய்ந்து குறிப்புடன் உரைசெய்வாயே

வள்ளி வசனம்

கேளும் சுவாமி! நான் இன்று பெரிதாகிய கோரிக்கை ஒன்றை எண்ணியிருக்கின்றேன் அது வந்து கைகூடும் கூடாதென்று பார்த்து சொல்லுங்கள் ஐயா சுவாமி

நாரதர் வசனம்

கேளும் பிள்ளையே! நேற்றிரவு ஒரு கனவு கண்டிருக்கிறாய் அதன் கோரிக்கையை சொல்லுகின்றேன் கேளும்

நாரதர் பாட்டு

01. சாஸ்திரம் கூறும்மென்று மலர்சாற்றிப் பணிந்திடும் வள்ளியரே, நேற்றிரவு வேலவனார் வந்து நேர்ந்தது காண்மனம் சூழ்ந்தது காண்

02. அவர் வந்தால் உம்மிடத்தில் கோபம் வைத்து
துரத்தி விடாதேயம்மா
செந்தேன் மொழியாளே கனா காண்பீரோ
இல்லையோ சொல்லும் அம்மா

03. பொருந்தும் குருபுதனும் அந்தப்
போதா வியாழனும் ஆட்சியதாய்
இருந்தொரு வெள்ளிப் பலனிதை இட்சணம்
சொல்லுவேன் நிட்சயமாய்.

04. நீ கண்ட கனவின் பலனிதை காரிகைகேயே
நீயும் ஓதிடக் கேள்
பண்பே யுருமாறி வேடன் பார்த்திபன்
போலே வருவாரம்மா.

நாரதர் வசனம்

கேளும் பிள்ளையே! நீ கண்ட கனவிற்கு பலன் சொல்லிவிட்டேன் உன் சோதிடத்தைப் பார்த்து, பார்த்த பலன்களைச் சொல்லுகிறேன் இவ்விடத்தில் இரு பிள்ளையே.

நாரதர் பாட்டு

01. பார்துச் சொல்வேனே பஞ்சாக்கத்தைப்
பாராமல் சொல்வேனே
பார்த்துச் சொல்வேன் வெகு நேர்த்தியதாகவே
பாவை இருக்கின்ற கிலேசமெல்லாமே ( பார்த்து)

02. அசுவினி ரோகினி ஆன புனர்பூசம்
அமிர்த யோகமும் சரியாய் இருக்குது (பார்த்து)

நாரதர் வசனம்

அசுவினி ரோகினி பரணி கார்த்திகை கற்கடகம் கன்னி துலாம் உள்கடகம் சாணி புறக்கடகம் பிரம்பு வாய்கடகம் மட்டை இப்படி இருக்க கந்தர்க்கும் வள்ளிக்கும் நன்றாய் இருக்குது கண்ட கனவெல்லாம் சரியாய் இருக்குது (பார்த்துச்)

வள்ளி தரு

தொடர்ந்து வார்த்தை சொன்னாய்
தூரப் போ நாரத முனியே- இந்த
துன்மார்க வார்தைகள் -என்
முன்னே சொல்லாதே முனியே

நாரதர் தரு

கடந்த வார்த்தை சொல்லக்
காரியமோ வள்ளித்தாயே
நீரும் கந்தரை மருவினால்
கனம் குறை உண்டோ சொல்வாயே

வள்ளி தரு

வாய்சாகசமும் வழக்கும்
பொல்லாது காண்முனியே
இப்போ வந்த வழியை நோக்கி
வாகாய் நடப்பீர் காண்முனியே

நாரதர் தரு

இந்தத் தினைப்புனத்தில் இருக்க
விதியோ வள்ளித் தாயே
கந்தர் இணங்கிக் கொண்டால் உன்னை
எவரும் கை கொடுப்பார்கள் தாயே

வள்ளி தரு

தள்ளி நடந்து கந்தசுவாமி
வந்தாலும் சொல்லாதே
துணிவு சொல் நாரத முனியே
நீ ஓடிப்போவாயே!

நாரதர்

குச்சிக் குடிலும் கட்டிக் குடியிருப்பதும்
நல்ல வாழ்வோ
குமரனை மருவிய கோவிலுக்குள்
இருப்பதும் தாழ்வோ

வள்ளி தரு

குச்சிக்குடிலும் செம்பொன் கோவில்
போலிருக்கு மென் குலத்துக்கே
நீரும் கொச்சைதனம் பேசி மிஞ்சி
வந்தாய் எந்தன் தலத்துக்கே

நாரதர் தரு

துள்ளுமாடு பொதி சுமந்தே
தீரும் வள்ளித் தாயே
கந்தர் தொடர்ந்து வருவார் கந்தசுவாமி
வந்தாலும் சொல்லாதே

நாரதர் வசனம்

பிள்ளையே நீர் மனதில் நினைத்திருக்கும் கவலையை சுப்பிரமணியக் கடவுள் வந்து தீர்த்துக் கொள்வார் ஒன்றுக்கும் பயப்படாதே அம்மா

நாரதர் மறு தரு

1. அஞ்ச வேண்டாம் அம்மணி உனக்கு
ஆறுமுக வேலர் துணையுண்டு (அஞ்ச வேண்டாம்)

2. அஞ்சவேண்டாம் அம்மா அரனுமுட உதவியுண்டு
அனுதினம் வடிவேலர் துணை செய்வார்
(அஞ்சவேண்டாம்)

3. அம்மா பஞ்சவருணக் கிளியே பரமன் பயின்றெடுத்த
பாலர் வருவார் வடிவேலும் கையில் கொண்டு

4. தையலரே மானே தையலரே மானே தவத்தில்
பெரியோர் சொன்ன ஐயர் சொன்ன மொழி
அன்பாய் நடக்கும் காண் (அஞ்சவேண்டாம்)

நாரதர் விருத்தம்

திருத்திய வேலும் திவ்விய திலகமும் செங்கையில் வாளும்
பொறுப் பெனத் திரண்ட தோளும் பூமணியும் சார்ந்த
ஒருத்தனுக் கிசைந்த நல்ல உத்தமியாய் பெண்ணே கேளாய்
கருத்தினால் கொண்ட எண்ணம் கை கூடும் கூடும் தானே

நாரதர் தரு

1. வேலுண்டு வினையுண்டு அம்மா – வெற்றி
வேலரை மணஞ் செய்து கொள்வாய் நீ அம்மா

2. கணமும் பொருந்தும் வள்ளித்தாயே –எங்கள்
கந்தரை மருவினால் கனம் குறை வருமோ

3. அசுரனைச் சமரில் வென்ற வேலன் -எங்கள்
அகிலாண்ட ராட்சத சிவசுத பாலன்

4. ஆரோ எவரோ என்றெண்ணாதே-உந்தன்
கருத்தில் இசைந்த மணவாளனம்மா

நாரதர் வசனம்

கேளும் பிள்ளையே! உன் அச்சர சித்தியெல்லாம் இப்போதுநாம் வரைந்து கொண்டு போய் கந்தருக்கு காண்பிக்கின்றேன் இக்கோட்டுக்குள் நில்லும் பிள்ளையே

சபை விருத்தம்

முனிவனும் இந்தவாறு மொய் குழல் வள்ளி மாதின் தனிவடி வழக்கைக் கண்டு தகுமாது சுவாமிக்கென்றுவனிதையர் நாடும் செந்திவடிவேலர் மேவும்திவ்ய புனித சன்னிதியை நாடிப் பொங்கமாய் வருகின்றாரே

(காட்சி முடிவு)

## இரண்டம் களம்

காட்சி ஒன்று

குறத்தி வரவு விருத்தம்

1. சிற்றடி தன்லே பாடகைச் சிலம்பும்
செழுமணித் தண்டையுமிலங்க
சேலை மேலணிந்த மேலாபரணஞ்
செம் பொன் ஒட்டியாணமும் திகழ
கைத்தலம் தனிலே மந்திரக் கோலும்
கைவளைக் கடிசமும் துலங்க
காத்திரமானதோர் நேத்திர விளியும்
கையில் கங்கணமாலையும் திகழ

2. மத்தக முலைபோற் புலிநகப் புத்தகமும்
வளர்பிறைக் கொந்தள ஓலை மின்ன
வளர் பிறை நெற்றியில் அணிதலைதாமும்
வையகம் மழுதையும் செயிக்க
கொந்திள முடிந்த கொண்டையில்
பூச் செருகி கூடையும் கைதனில் ஏந்தி
கொஞ்சிய கிளிபோல் நஞ்சிதம் பேசிக்
குறத்தியும் கொலுவந்தனளே.

குறத்தி பாட்டு

1. வஞ்சிவந்தனளே ஒய்யாரக் குற
வஞ்சி வந்தனளே
வஞ்சி வந்தாள் எங்களம்மை
வாளரம்பூ மலைநாட்டாள்
கொந்தளப் பெண் ஓலை துன்ன
கோகுலம் போல் கையை வீசி

2. வஞ்சி வந்தனளே ஒய்யாரக் குற
வஞ்சி வந்தனளே
நடையிலே இவள் அன்னப் பேடுகள் போலவே
நாகவடம் போலிவள் சோதிகள் மின்னவே
வஞ்சி வந்தனளே ஒய்யாரக் குற
வஞ்சிவந்தனளே

மறுதரு

1. பச்சை குத்தலையா அம்மா மாரே
பச்சை குத்தல்லையா
அம்மா அம்மா அம்மாமாரே
அழகான பெண்டுகளே
அடியாள் நான் சொல்லும்
குறி அன்புடனே கேட்பீரே

2. அச்சையிலே பச்சை குத்தி
அழகான பொட்டுமிட்டு
மை எழுதிப் படமுடிப்போம் வாராய்
சின்னப் பெண்டுகளே
பச்சைகுத்தலையா அம்மாரே
பச்சை குத்தலையா

வள்ளி வசனம்

கேளும் குறத்தியம்மே! என் மனதில் ஒரு பெரியதாகிய கோரிக்கை எண்ணியிருக்கின்றேன் அது கூடும் கூடாது என்று என் கையைப் பார்த்துச் சொல்லும் அம்மா நீ

குறத்தி தோத்திரம்

மாடனே கறுப்பணா மண்டபத் தாயே
பூமியெல்லாம் புரட்டும் குறளியே
எக்கலால் தேவியை என் குல தெய்வமே

பக்கமாய் பலிகொள்ளும் பராசக்தி தேவியே
வீரபத்திரனே விளங்கும் காடேறியே
சூரனைப் பலிகொள்ளும் துர்க்கை சாமுண்டியே
எந்தன் குறிக்கு என்னிடமிருந்து
வரமது தருவாய் மதுரை மீனாட்சியே

குறத்தி வசனம்

மதுரை மீனாட்சியே! பாலசரஸ்வதியே நான் சொல்லும் குறிக்கு உண்மைகள் நடக்க வேணும் தாயே

குறத்தி பாட்டு

1. சொல்லுவேன் நான் குறி சொல்லக் கேளுமடி அம்மே
தோகையரே நல்ல குறி நான் சொல்லக்கேள் மகளே

2. வல்ல கணபதியை மனதில் எண்ணிக்கொள்ளும்
பால சுப்பிரமணியரை நீர் போற்றிக்கொள்ளும்

3. ஏண்டியம்மா முகம் வாடியிருக்கிறாய் ஒரு வகையாய்
வாடியம்மா தாரும் உந்தன் வலது கையைப்பாரப்போம்

4. அன்னமெனும் நடையாளே ஆரணங்கே கேளும்
அன்புடனே குறிகள் சொல்லும் அடைவுதன்னைக்கேளும்

5. பெண்ணணங்கே தலை முழுகி பெண்துகில் உடுத்து
புகழ் பெரிய ஆடவரை மனதில் எண்ணிக் கொள்ளும்

6. காணிக்கையும் பச்சரிசி தேங்காயும் கொண்டுவா
காரிழையே வெற்றிலையும் அடக்கியும் வைமகளே

7. வாசல்படி கெவிளியது நேசத்துடன் சொல்ல
வருவாடி உன் கணவர் வாய்த்த மணவாளன்

8. நாரத முனியொருவர் வந்தாரடி மகளே
நலமாகப் பாட்டெழுதிக் கொண்டு போறார் குயிலே

9. சொன்னபடி கணபதிக்கு பொங்கல் இடும் மகளே
தோகையரே நல்ல குறி நான் சொல்லக் கேள் மகளே

10. வேடரூபமாக முந்தி வருவாரடி மகளே
வேங்கை மரமாக நிற்பாரடி குயிலே

11. காங்கேயன் உருமாறிக் கருங்கிழவன் ஆகி
கனவேடிக்கை காட்டிடுவர் கன்னியரே உன்னை

12. பழுத்தக்கிழப் பண்டாரம்போல் வருவாரடி மகளே
பசிக்குதென்று தேன் தினைமா கேட்பாரடி குயிலே

13. தாகமென்று தண்ணீர் கேட்டுத்தவிப்பாரடி மகளே
தாகமது தீர்ந்த பின்பு தழுவ வருவார் குயிலே

14. குழந்தை தலைக் கெண்ணையும் வை கூடைக்குள்
நெல்லும் வை குறவனுக்கு உடுபுடவையுறுமாலும்வை
மகளே

15. வந்த வெகு நேரமடி வஞ்சியரே நானும்
வந்தெனக்கு வெகுமதிகள் தந்தனுப்பும் மகளே

குறத்தி வசனம்

கேளுமடி மகளே! வந்து வெகு நேரமாகிவிட்டது
தரவேண்டிய வெகுமதியை தந்தனுப்பும் மகளே

வள்ளி வசனம்

இதோ தந்தேன் வெகுமதி பெற்றுக்கொள்வாய் குறத்தியம்மே!

குறத்தி பாட்டு

1. அக்கை ஆத்தை என் ஆச்சியாரே – என்
ஆம்பிளையான் போன வழி நீங்களறிவீரே

2. சோத்தக் காச்சி கொண்டுவரச் சொல்லி –அவன்
தோளிலே தமுக்குப் போட்டு வீசி நடப்பாண்டி

3. சாராயம் கள்ளுக் குடிப்பாண்டி – அவன்
சாலை கண்ட இடங்களெல்லாம் சாய்ந்து கிடப்பாண்டி

4. நண்டுனத்த இலக்கறிக்கு நான் போனேன்- அவன்
நாட்டி வைத்த வள்ளல் என்று சூத்தில் உதைத்தாண்டி

குறத்தி வசனம்

என் குறவன் இவ்வழியால் வரக்கண்டீர்களா அம்மாமாரே?

(காட்சி முடிவு)

## காட்சி இரண்டு

குறவன் வரவு .விருத்தம்

வக்காவின் மணி சூடி மயில்போலும் சிங்கிகவரும்
வழியைத்தேடி கொக்கோவென்று ஓலமிடும்
குருவி கொக்குக்கேற்ற கண்ணி -கையில் கொண்டு
சிக்கான புலிகரடி நடு நடுங்கத் தேவரெல்லாம் வெறுத்து நோக்க
மிக்கான கானகத்தில் நதிக் குறவர் சூட புனக்குறவன் தேற்றினானே

குறவன் பாட்டு

1. சிங்கன் வந்தானே மலைக்குறச்
சிங்கன் வந்து தேற்றினானே
சிங்கனும் வந்தானே இங்கிதமாகவே
சீனக் குறத்தியைத் தேடித் தேடிக் கொண்டு

2. வக்கா நாரைக்கு கண்ணிகுத்தி ஒரு
பேடைக்குயிலோடு போனண்டையே
வாக்காவும் கொக்கும் பட்டுக்கிடக்குது-ஒரு
வாகான சிங்கியைக் காணண்டையே

3. மாடப்புறாவுக்கு கண்ணிகுத்தி ஒரு
கொக்குப் பிற கண்டேபோனண்டையே
மாடப்புறா மயில் பட்டுக்கிடக்குது ஒரு
வாகன சிங்கியைக் காணண்டையே

4. சிங்கியைக் காணண்டையே மலைகுற
வஞ்சியைக் காணண்டையே
வஞ்சியே காமப் பசுங்கிளியன்னத்தை
சிங்காரமான எனது நாயகியை (சிங்கியை)

குறவன் வசனம்

(அடே, எங்கேயிருந்து வருகிறாய்)
நான் ஐயா,திருக்கணாமலையிலிருந்து கப்பலில் ஏறி, கல்குடா

முகத்துவாரத்தில் வந்து இறங்கினேன். அங்கே இருந்து கவுண்மேந்து றோட்டால் என் குறத்தியும் நானும் குடு குடு வென்று ஓடி வந்தோம். வாற வழியிலே றோட்டுச் சந்தியில் ஒர் குடிசை இருந்தது. என்னடா என்டேன். கள்ளுடா என்றான். போடுடா பதினொரு சல்லி குறைய ஒரு பணத்துக்கு எண்டேன், போட்டானையாசரியான ஒரு போடு அப்புறம் என்குறத்தியைப் பார்த்தேன் காணவில்லை தேடிவாறேனையா.

சபை வசனம்

உன் பெண்சாதியை எங்கே தேடினாய்?

குறவன் தரு

1. தேடி எங்கும் காணண்டையே
என் சிங்கியை நான்
தேடி எங்கும் காணண்டையே

2. தேடி எங்கும் நான் திரிந்து
தேசமெல்லாம் நான் அலைந்து
வாடிமனம் நோகுதையா
வண்ணமுள்ள சிங்கிதனை (தேடியெங்கும்)

3. நாடிய நாகூராம் கேளிடையேதத்தங்குடி மாகாணம்
கொத்தம் குடியாம் முலையால் ஒளிக்கப் பண்ணுவேன்
ஒளித்தவரை மோகன மந்திரத்தால் வரப்பண்ணுவேன்

4. காடுகட்டு அக்கினிக் கட்டு குறளிவித்தை
கண்கட்டு வித்தைகளும் காட்டித்தருவேன்
கூடியிருக்கும் அந்தணர் நாட்டும் கூடலூர்
தேவாரம்பாடியே வந்தேன்

5. கொல்லம் கொழுப்புதேடி கேளிடையே
கௌதாரி புலியெங்கும் தேடியே வந்தேன்
தேடியெங்கும் காணண்டையே என்சிங்கியை நான்
தெடியெங்கும் காணண்டையே

குறவன் வசனம்

இத் தேசம் முழுவதும் தேடிப்பார்த்தேன் என் சிங்கியைக் காணவில்லையே ஐயா!

சபை வசனம்

உன் பெண்சாதியின் நிறம் குணங்களைத் தெரிவிப்பாயா?

குறவன் பாட்டு

1. கன்னங்கறுப்பி கறுத்த கொண்டைக்காறி ஐயாமாரே
அவள் காதிலே குண்டலத்தோடு போட்டாடுவாள் ஐயாமாரே

2. செக்கச் சிவப்பி சேர்ந்தாறு மாசம்தான் ஐயாமாரே
அவள் சேர்ந்த மனிதரோடு உறவு கொண்டாடுவாள்
ஐயாமாரே

3. பள்ளிப்பிள்ளைகளோடு பரிகாசம் பண்ணுவாள் ஐயாமாரே
அவள் பாப்பாரம் பெண்ணோடு பந்து போட்டாடுவாள்
ஐயாமரே

குறவன் வசனம்

ஐயா! ஒரு நீலி நெடுவல் கறுப்பி, இப்படிப்பட்ட அங்கலெட்சணமுள்ள ஒரு பெண் அவளைக் காட்டித்தந்தால் மருந்து வசியம் இவைகளெல்லாம் தருவேன்.

சபை வசனம்

என்ன மருந்து வசியங்கள் தருவாய்

குறவன் பாட்டு

காடையிறகு தருவேன் கேளிடையே
கவுதாரி முட்டை ரெண்டு நான் தருவேன்
கோழியிறகு தருவேன் கேளிடையே
குள்ளநரிக் கொம்பிருக்கு நான் தருவேன்

நல்ல நல்ல வேர் தருவேன் கேளிடையே
நாகதாளி கிழங்கிருக்கு நான் தருவேன்
மலையான் சிறுகுருவி கேளிடையே
வாகான முட்டைகளும் நான் தருவேன்

மலையைக் கரையப்பண்ணுவேன் குமரிகட்கு
வராத தனங்களை வரப் பண்ணுவேன்
முலையில் ஒளிக்கப்பண்ணுவேன் ஒளித்தவரை
மோகன மந்திரத்தால் வரப்பண்ணுவேன்

காடுகட்டு அக்கினிக்கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளும் காட்டித் தருவேன்
காடுகட்டு அக்கினிக் கட்டு குறளிவித்தை
கண்கட்டுவித்தைகளும்காட்டித் தருவேன்

சிங்கன் வசனம்

இப்படியான மருந்து வசியம், பாம்புக்கல், வேர் குளிசை மாத்திரைகள் விரும்பியதைக் கேட்டால் தருவேன்

குறத்தி மறுவரவு விருத்தம்

கொல்லிமலையிலிருந்து குறம்பாடிக்
கூடையும் கையிலேந்திக் கவியுரைந்து
நல்லியதோர் நறுமலர்கள் மேல்முழுதும்
மணமஞ்சல் அழுத்திப் பூசி
பல் விளக்கும் பொடியுடனே பச்சை நீலம்

பாவையரைத்தான் மயக்கும் வசியம் கொண்டு
எல்லை மலர்ந்தெரு வீதி அலைந்துருகிக்
குறத்தியும் கொலு வருகின்றாளே.

குறத்தி தரு

1. குறத்தி வாற விந்தையைப் பாரம்மா
கூடையும் கைதனில் ஏந்திக் கொண்டு
திருத்த குறி சாஸ்திரங்கள் சொல்லத்
தேடிவழிதனில் தோற்றினாளே

2. பச்சை உடம்பு பளபளக்கச் சித்திரம்
பாரஸ்தனம் செண்டும் பால் சொரிய
வைத்த காலடி நோகாமல் சித்திர
மாமயில் அன்னங்கள் போல் நடந்து

3 இருந்திருந்து வழி நடந்தாள் அம்மா
வெயிலைக்கண்டு முகம் வேர்த்தாள்
மருந்து வசியம் என்னிடத்திலிருந்து
வாங்குவார் இல்லையோ ஐயாமாரே

சபை வசனம்

இவள் தானா உன் பெண்சாதிபார்!

குறவன் வசனம்

ஐயா இவளாய்க் காணவில்லை என்றாலும் நாட்டு வளப்பங்களைச் சொல்லட்டும் பார்ப்போம்

குறத்தி தரு

1. என் நாடு வள நாடு கேட்கிறாயே குறவா
இயலான வெள்ளியங்கிரி நாதரிட தேசம்

2. கல்லடர்ந்த மலை நாடு காடு மற்றுமொரு தேசம்
கைலயங்கிரி நாதரிட தேசமடா நாங்கள்

3. பச்சை மலை எங்களது நாடு பரமசிவன்
வந்திறங்கி படியளக்கும் நாடு

குறவர் வசனம்

அது இருக்கச் சாப்பிடும் சாப்பாட்டைச் சொல் பார்ப்போம்?

குறத்தி தரு

1. தங்கமழை சொரியக் குறவா
தக்கும் மலை நாடு என் நாடு
முள்ளும் நற் சென்னலுமாய் எங்கும்
மோதி விளைந்திருக்கும்

2. ஆனையடி மறையக் குறவா
அரை நாழி நெல்விளையும் என்நாட்டில்
கோழி கெருடனுமாய் ஒரு
கூட்டில் விளையாடும் என்நாட்டில்

3. கீரியும் சாரப்பாம்புமாய் ஒரு
கிண்ணத்தில் பால் குடிக்கும் என்நாட்டில்
நாயும் முயலுமதாய் நடு
வாசல் குடியிருக்கும் என்நாட்டில்

4. வாழை வடக்கீனும் குறவா
வான் கழுகு தெற்கீனும் என்நாட்டில்
சோலைக் கிழக்கினும் குறவா
சொன்ன பிலா மேற்கீனும் என்னாட்டில்

குறவன் தரு

1. அடி இத்தனை நேரமாய் என்னைத் தனியேவிட்டு
எங்கடி போனாய் நீ வங்காளச் சிங்கி

குறத்தி தரு

2. எங்கே போனதென்று என்னை நீ கேட்கிறீர்
தங்கக் குறி சொல்லப் பேனேன்டா குறவா

குறவன் தரு

3. குறி சொல்லப் போன இடத்திலே கோதையே
உனக்கிந்த பொட்டு அழிந்த வகை ஏதடி சிங்கி

குறத்தி தரு

4. வெயிலைக் கண்டு நான் வீசி நடக்கும் போது
வேர்வைபட்டழிந்ததடா குறவா

குறவன் தரு

5. அடி முன்னூறு பவுணில செய்திட்ட மூக்குத்தி
முத்துத் தெறித்த வகை ஏதடி சிங்கி

குறத்தி தரு

6. முட்டியோடு பாலை முண்டிக்குடிக்கும் போது
முத்துத் தெறித்ததடா குறவா

குறவன் தரு

7. பாக்குப் படாத பவளவாய்ச் சொண்டிலே
பல்லுப் பதித்த வகை ஏதடி சிங்கி

குறத்தி தரு

8. பாலப்பழம் என்று சோலைக்கிளி வந்து
கொத்திக்கொண்டோடுதடா குறவா

குறவன் தரு

9. ஆலிலைபோல அமர்ந்த திருவயிறில்
ஆகப்பெருத்த வகை ஏதடி சிங்கி

குறத்தி தரு

10. பாலுடன் சோத்தை நான் தாதிமார் கூடரிந்து
பசியாறி உண்டேனடா குறவா

குறவன் தரு

11. சுத்துக் கம்பிச் சேலை உடுத்திட்ட இடைக்கு
சூரிய காந்திப்பட்டு ஏதடி சிங்கி

குறத்தி தரு

12. செல்வர்கள் தந்தாரேஅதிபதி நாயகர்
வாங்கி உடுத்தேனடா குறவா

குறவன் தரு

13. காலிலே போட்டதோர் காலாளிப்பீலி
களண்டு விழுந்த வகை ஏதடி சிங்கி

குறத்தி தரு

14. கள்வனைக் கண்டு நான் கடுகி நடக்கும் போது
களண்டு விழுந்ததடா குறவா

குறவன்மறு தரு

1. அடி நண்டவிச்ச குண்டுச்சட்டி நானடி தந்தேன்
நாசமத்த சக்களத்தி சட்டியைத்தாடி

2. தோண்டி மண்டியே சிறுக்கி தோதகப் பல்லி
கொப்பனைக் கண்டால் தெரியும் கொப்பாரக்கள்ளி

குறத்தி புலம்பல்

ஐயோ சிவனே கர்த்தாவே
இவனை யானை அடியாதோ
அளியேன் கை ஊதாதோ
மாடு வெட்டி துாளிகட்டி

ஐயோ சிவனே கர்த்தாவே
மானிடர் காவி வர
இலையான் எழும்பி வர
ஐயோ சிவனே கர்த்தாவே

இறையவனே கண் பாராய்
என்னைக் குயவன் எடுக்கானே
ஐயோ சிவனே கர்த்தாவே
ஒரு குண்டுச் சட்டி செய்யானோ
ஒரு சல்லிக் கீரை வாங்கி
ஐயோ சிவனே கர்த்தாவே
ஒன்றிரண்டாய் கடைந்து
அந்த வயிறு தள்ளிக் குறவனுக்கு
ஐயோ சிவனே கர்த்தாவே
வளித்து வைத்தும் போதாது
என்ன வைத்தான் ஏது வைத்தான்
ஐயா சிவனே கர்த்தாவே
அவன் வீட்டைச் சுற்றி
குண்ட விற்றுண் குடிலை விற்றுண்
ஐயோ சிவனே கர்த்தாவே
குடிக்க வைத்த செம்பை விற்றுண்
நான் பெண்ணாய்ப் பிறந்ததுக்கு
ஐயா சிவனே கர்த்தாவே
ஒரு பிடி மண்ணாய்ப்
பிறந்தேனில்லை

குறவன் பாட்டு

குட்டி குட்டி சாமி கும்பிடப் போவம் வாடி
குட்டி குட்டி சாமி கும்பிடப் போவம் வாடி

குறத்தி பாட்டு

அத்தான் அத்தான் நான் வரல்ல திரு நாளுக்கு
அத்தான் அத்தான் நான் வரல்ல திருநாளுக்கு

குறவன் பாட்டு

தோண்டி மண்டி ஏன் சிறுக்கி தோதகப்பல்லி
ஏன் சிறுக்கி ஏன் வரல்ல திருநாளுக்கு

குறத்தி பாட்டு

காதுக்குத் தோடும் இல்லை
கைக்கு வெள்ளிக் காப்பும் இல்லை
அத்தான் அத்தான் நான் வரல்ல திருநாளுக்கு

குறவன் வசனம்

குட்டி! நான் மதுரைக்குப் போய் உனக்கு வேண்டிய சாமான்களை வாங்கி வருகிறேன். நீ வீட்டில் இருப்பாயாக

## 3ம் களம்

காட்சி ஒன்று

வேடன் வரவு விருத்தம்

விந்தை நாரதனால் விளம்பிய வசனம் கேட்டு
கந்தனார் வேடனாகிக் கதித்ததோர் தழையும் பூண்டு
சொந்தமாய் வில்லம்பும் தோன்றிய வலை நாய் சிங்கம்
அந்தமாய் எடுத்த வள்ளி அரும்புனம் வருகின்றேனே

வேடன் தரு

1. உல்லாச வனவேடன் வந்தானே வன
வேட்டையாட வேட்டையாட
உல்லாச வனவேடன் வந்தானே
உல்லாச வனவேடன் வந்தான்
வீராதி சூரனைப் போல் கருத்தில் வில்லும் கதித்த
பாணமும்
உரக்க பேசிச் சிறந்த (உல்லாச வன வேடன்)

2. கன்னி மின்னல் வள்ளி மாது கணையாய் - மிகவே
உருகி வாடி
கானமயில் ஏறித் தீரன்
கதித்த ரூபன் தலையும் கொண்டு - (உல்லாச வன
வேடன்)

வேடன் மறு தரு

1. வேடனும் வந்தான் குமர குரு வேடனும் வந்தான்
அடமாய் வில்லம்பு கொண்டு அறிவை புனமே சென்று
மடமானை எய்யவென்று மனதாசையாக கொண்டு
(வேடனும்)

2. சிக்கமிலங்க தழைகளும் பக்கமே தொங்க மிக்க
வலையும் நாயும் மிகையீட்டிதான் துலங்க நக்கன் மகனே
என்னவேன் நாடோர் துதி செய்ய (வேடனும்)

3. நாரதர் சொல்ல வள்ளியாசை தோரமால் வெல்ல
காரானை புலிகளும்கரடி கடம்பை பன்றி
வாறவழி தென்று மனதாசையாகக் கொண்டு (வேடனும்)

4 காணாது வென்று தினப் புனம் தோணாது வென்று
வீணாமலை கடந்து மீக வள்ளியிடம் சென்று
தானே சாவேரி ராகம் தயவாய்ப் பாடிக்கொண்டு
(வேடனும்)

வேடன் கொச்சகம்

மின்னலெல்லாம் ஒன்றாகி விளக்கு உருவானது
மண்ணில் கருங்கட்டி உருவானதுவோ வார்த்த பொற் சீலையோ
துன்னும் கலை மதியோ சூரியனோ அல்லாதிந்த
பண்ணும் முனிதானுரைத்த குறப்பாவை இவள்தானோ

வேடன் வசனம்

ஆகா மின்னலெல்லாம் கூடி ஏக உருவானாதுவோ அல்லது
பொன்னினால் செய்த சித்திரப் பதுமையோ ஆகா நான்
புகழத்தக்கதாக அந்த நரதர்முனி சொன்ன குறப்பாவை
இவள்தானோ நான் அறியேன் தெய்வமே

வேடன் தரு

1. தேவியவளே யோக்கியம் இசைந்த –நல்ல
அதிசய வசி வாக்கியம்

2. தாவி நெருங்கும் தினைப்புனத்தில்-கிளிபோல்
விளங்கும் எட்டிக்கனியாய் மொழி சிமாட்டி

3. திரிபுவனம் முழுதும் தேடிய கம்பமது-திரு
சித்திரமிவள் ஒருத்திக்கிசைந்திடாது

4. வெறிபிடித்த மனம் வேறொன்றைத் தேடாது
விருத்தானாலும் மையல் வருத்தாமலே விடாது

5. விரத நங்கை சுரத நங்கை விரத்தைக்காட்டி மிகு
சுரத்தைக்காட்டி நின்ற (தேவியே)

6. ஆதிநாளில் பிரம்மன் ஆருக்கென்றோ இவளை
அமைத்தான் இப்படி வெகுசமைத்தான் உலகில்
பெண்ணை

7. திவ்ய குணங்களைக் கண்டு தொனிக்கும் கோதில்லாத
இனிய செல்வம் செழிக்கும் சீனிக் கற்கண்டு தலைமை
கண்டு நிலமை கொண்டு தலத்தைக் காத்து
மகிழ்ந்துலத்தைச் சார்ந்து நின்ற

வேடன் விருத்தம்

வானுதையம் போல் விளங்கும் மின்னிடையே கேளாய் கானகம்
தனில் நான் விட்ட கணையாள் மெலிந்து வாடி முன்னதி
வேமாகத் தனித்து புனத்தை நாடி மான் ஒன்று வந்ததுண்டோ
மங்கையரே உரை சொல்வாயா

வேடன் வசனம்

கேளும் பெண்ணே! அம்பானது பட்டு இவ்வழியால் ஓடக்கூடியதாய் ஒரு பெண்மான் வந்ததுண்டோ சொல்லும் பெண்ணே

வள்ளி விருத்தம்

வனத்தில் எய்த புள்ளி மான் ஓடி வந்ததென்று கனத்த
வல்மையாக கட்டி கதையொன்றைப் பிணைத்து வந்து தனித்
தொருவர் இல்லாது சமயம் பார்த்து வந்து இப் புனத்தில் வந்து
என்னைக் கேட்க புனிதமோ புகழுவாயோ

வள்ளி வசனம்

கேளும் வேடனே! நான் தனிமையாய் இருக்கும் தேடி வந்து கெட்கவும் தகுமோ புனத்தை விட்டு அப்பாலே போம்பிள்ளாய் வேடனே

வேடன் விருத்தம்

சேவலைக் கண்ட பேடோ கொக்கரிப்பதைப் போல தாவு
பூங்குயிலோ மெத்தச் சமத்தாக பேசவேண்டாம் கூவு
இளங்குயிலே மெத்தக் குரலோசை திசை கேட்டு ஆவலாய்
இங்கு வந்தேன் அதுவுமோர் பிளையோ சொல்வாய்

வேடன் வசனம்

கேளும் பெண்ணே! உன் குயில் போன்ற குரலைக்கேட்டு அதிக வேகமாய் வந்தேன் அதனால் குற்றமுண்டோ பெண்ணே

வள்ளி விருத்தம்

சரிசரி உன்னில் வேறு தப்புதம் இல்லை கண்டீர்
தெரியாது இவ்வழியாய் வந்த காரியத்திருடன் என்று
பிரியமாய் என்னைத் தவம் செய்து பெற்ற வேடுவர் கண்டால்
மரியாதையல்ல வந்த வளிநோக்கி நடந்திடுவாயே

வள்ளி வசனம்

கேளும் பிள்ளாய் வேடனே! ஒரு புனுகு வாசத்தைக் கண்டு வீண் வார்த்தையை விடாமல் புனத்தை விட்டு ஓடிப்போவீராக

வேடன் கொச்சகம்

நான் வந்த வகை கேளாய் மடமயிலே உன்னையும் நான் சந்தகமும் சேர்ந்து தழுவி விளையாடவே வந்தேன் விந்தை மலர் வேள்விமாறன் சிந்தை மகிழ்ந்தே உனது திருவருள் செய்ய வேணும் மாதே உன்னருளால்

வேடன் வசனம்

கேளும் வள்ளியமிர்த்தமே! உன்மேல் அடங்காத ஆசை கொண்டு வந்தேன் என்னைச் சேர்ந்துகொள் பெண்ணே

வள்ளி வசனம்

கேளும் பிள்ளாய் வேடனே! வீண்வார்த்தை பேசாமல் புனத்ததை விட்டு அப்பால் ஓடிப்போவீராக

வேடன் தருக்கம் தரு

உந்தன் ஆசை எந்தனை சொந்தமாய் வருத்துதடி
வந்தணைத்தால் உத்தமகங்கள் ஆகுமோ வள்ளி

வள்ளி தரு

உத்தமன் எத்தனையும் கத்த வித்தை பயின்றாய் எத்துவேன்
புனத்தில் உன்னை குத்துவேன் பத்திரமாய் சிற்றமதில்
உற்றுமசை பெற்றிட நினைத்தாய் போம் போம் எத்துவவேனே
புத்தியற்ற சித்த வன வேடனே

வேடன் தரு

விந்தை மலர் வள்ளிக் கொடி வந்தெனைக் குறித்து மாறன்
உகந்து நான் சாதித்திடாமல் உன்னிடம் வந்தேன் பெண்ணெ
சொந்தமாய்

இதழ் அமிர்தம் தந்துமே உன்னிடம் விந்தையாய் அணையாமல்
நிந்தையாய் போ என்றதென்னை

வள்ளி தரு

வள்ளி என்று இப்புனத்தில் வந்ததேது நீ கொடிய கள்ளி
என்றறியாமலே கலந்துரைத்தாய் வேடா துள்ளி விளவோ
வில்லால் அடித்து தள்ளி விடுவேன் உன்னைச் சங்கை இல்லா
வேடனே

வேடன் தரு

மேகலா கிரியாளுடன் மோகமாகினேன் உன்மீதில் தாகமாய்
தின்னப் புனத்தில் வந்தேனடி பெண்ணே வேகமாய் அதிகம்
திரேகமும் உருகுது பாகுசேர் மொழிநயம் கூந்தல்தோகை
மாமயில் மானே

வள்ளி தரு

தோகை மாமயிலேஎன்னை அகமும் குளிரமையல்
மோகமாகினேன் உன்மீது காதல் தீரென்றாய் வேடா
காகம்போல கத்தினால் காதல் தெரியாது வேடா சாடுவேன்
ஓடிப்போ வேடா

வேடன் தரு

சாடுவே தென்றல் பலிக்குவாடி உன் மேல்
ஆசையுற்றேன்ஆடவர் பாவம் பொல்லாது ஏகுவது ஏனோவீணாய்
வேடர்கோன் என்னை நீரும் கூடி விளையாடாமல் நீடுவாழலாம்
இருவர் கூடி என்முகாரிபாடி

வள்ளி தரு

பச்சிலை புனைந்து மனதிச்சையப் புனத்தில் மெச்சியே புனம்
வநதாய்யிச்சைகெட்ட வேடா கச்சை புனை என்தமையன்
வச்சிரம் இல்லாக் கோல் கொண்டு இச்சணம் கொண்டு வருவார்
உன்னைக் குத்துவார் வெட்டுவார் வேடா

வள்ளிவிருத்தம்

ஏது காண் இங்கே வந்து இடமளியாத வீணாய் மோதிக்
காதவார்த்தை விளம்பிடத்துணிந்து கொண்டாய் போல தனமாய்
வந்து பிழை மோசம் போவார் இல்லை வேதனையும் வந்து
வளைந்திடும் சொன்னேன் சொன்னேன் கேளும் வேடனே,
வீண்வார்த்தையாடாமல் ஓடுவீராக

வேடன் விருத்தம்

இடம் பொருள் ஏவல் முன்றும் எண்ணாமல் துணிந்து பேச
வீண்படுவேனே சும்மா யோசனை பண்ண வேண்டாம் தடம்
சிலை மதவேள் வந்து தாக்கிய கணையாளே இடம் தருவீரோ
காமவாதை தீர்த்தருள் வள்ளி மாதே

வசனம்

கேளும் பெண்ணே இடம் பொருள் ஏவல் என்று சொல்லப்பட்ட மூன்றுகாரியமும் அறிந்து வந்தேன் அல்லாது வேறல்ல அறிந்து கொள்ளும் பெண்ணே

வள்ளி விருத்தம்

கேளும் வேடனே! என் வார்த்தை சற்றும் கேளாமல்
வெறிப்பிடித்தவன் போல் பிதற்றுகிறாய் புனத்தைவிட்டு ஓடும்
பிள்ளாய் வேடனே

வேடன் கலிப்பா

மதிபோல் முகமும் வடுப்போல் வழியும் மலர்க்கையுமாய்
எதிராக நின்ற இளங்கிளியே வள்ளி ஏந்திழையே சதியால்
எனதுயிர்மானவனே மாரன் சரம் தொட்டதுவோ
அதிமோகமாகுதடி என்னையாண்டருள் வஞ்சியரே

வேடன் வசனம்

கேளும் பெண்ணே! உன்மெல் அடங்காத மையல் கொண்டேன் என்னைச் சேர்த்து கொள்வீராக

வள்ளி தருக்கம்

அதிமோகம் கொண்டென் என்று அதிமோசம் செய்ய வந்தாய்
அகலுவாய்ப் புனத்தை விட்டு அப்பாலே வேடா அரநொடி
தனிலே உன்சிரமது பொடிபட சரமது விட்டேன் விரைவினல்
ஓடாய்

வேடன் தரு

விரைவினில் ஓடுடாவென்று உரைசெய்த வள்ளிமாதே உருகுது
மனம் மெத்த அணைவாயே பெண்ணே ஒரு தர மெனதுடல்
உருகுது பெண்ணே காரிலையை குறமகள் கண்ணே என்
பெண்ணே

வள்ளி தரு

கண்ணே என் பெண்ணே என்று விண்ணாணம் பேசவந்தாய்
கடந்து அப்பாலே போடா கன வேடா பாவி அருகி நீ வருவது
சரியல்ல வேடா பரிதியோடு பழிபகருமோ போடா

வேடன் தரு

போடா நீ என்று சொல்ல புண்ணியம் செய்தேனே நான்
வாடா நீ என்று வாழுத்தாயே வள்ளிமாதே
வடி தமிழ் கொடியிடை வஞ்சியென் மானே
குடமுலை கொஞ்சியே நெருங்குவேன் பெண்ணே

வள்ளி தரு

கொஞ்சுவேன் நான் என்று கூசாமல் பேசி வந்தாய்
ஷவஞ்சக வேடா உன்னை வதைப்பேன்டா பாவி
பங்கமாய் என்மேல் மயக்மோ போடா
இங்கிது உனக்கிது ஏற்குமோ மூடா

வேடன் தரு

வேடன் நான் என்று சொன்ன வாகான வள்ளிமாதே
ஆகாது ஆண்பலி அணைவாயே பெண்ணே
அயிலெனும் வழிதரு ஒயிலெனும் மாதே
மையல் அதனை திரடி வஞ்சியே மானே

வள்ளி தரு

மையல் தன்னதைத் தீருமென்று வாதாடுகிறாய் பாவி
ஆயர் முருகேசனை அடியாள் என்றறியாமல்
அதி மையல் கொண்டு அலைந்துமே வந்து
சதி வரும் வகை எது தானறியாயட

வேடன் கொச்சகம்

கல்லோதான் உன்மனது கரையாது வல்லிரும்போ
வெல்லாப் பகையோ வினையோ முன் வெஞ்சினமோ
அல்லாதுன் மீதினுனக்கு அன்பில்லையோ இன்னமும்தான்
சொல்வாயோஎனக்கிசைந்த தோகைமட மானே

வேடன் தரு

மானே என்மீது மனம் இரங்கிப் பெண்ணே
ஒரு வார்த்தை சொல்வாய் அன்னமே பெண்ணே

வள்ளி தரு

ஏது காணும் உனக்கிறுமாப்பு வார்த்தைகள்
இங்கே நடவாது ஓய் வேடனே

வள்ளி தரு

கண்ணே கருணை புரிந்து வந்தேன் பெண்ணே
எந்தன் கடைக்கண்ணாலும் பாராயோ அன்னமே பெண்ணே

வள்ளி தரு

புண்ணாகவே மனம் புலம்பித் தவிக்கிறீர்
போங்காணும் அப்பாலும் ஓய் வேடனே

வேடன் தரு

காமன் கணைகள் வருத்துதே பெண்ணே
எந்தன் கண்ணாட்டியே பாராயோ வள்ளி

வள்ளி தரு

நேயங் கெடவே நீரும் பேசுகிறீர் வேடா
நில்லாது போங்காணும் ஓய் வேடனே

வேடன் தரு

இந்துவும் செந்தணலாக எரியுதே
இன்னமும் இரங்காயோ அன்னமே வள்ளி

வள்ளி தரு

சிந்துக்குச் சிந்துகள் பாடுகிறீர் அண்ணா
கூடாது போங்காணும் ஓய் வேடனே

வேடன் தரு

ஆறுதல் சோருது ஆவேசம் ஆகுது ஐயோ
அணைத்துக் கொள்வாயோ அன்னமே பெண்ணே

வள்ளி தரு

ஆருயிர் மாழ நின்றாடுழுகிறீர் வேடா
அப்பாலும் போங்காணும் ஓய் வேடனே

வேடன் தரு

தென்றல் குழம்பி வந்து சீறியே பாயுது
கிருபை செய்யாய் அன்னமே வள்ளி

வள்ளிதரு

தென்திசை வேடுவர் கண்டால் தீங்கு வரும்
சீர்தப்பி பேசாதே ஓய்வெடு நீ

வேடன் தரு

சீரிழந்தாலும் உன்பேரிழந்தாலும்
சிந்தை மறப்பேனே அன்னமே பெண்ணே

வள்ளி தரு

முன் பின்பாராமல் பேசுகறீர் அண்ணா உன்
மோகத்துக்கு என் செய்வேன்

வேடன் தரு

அன்னமே உந்தனக் கஞ்சலி செய்வேன்
ஆசையைத் தீராயோ அன்னமே வள்ளி

வள்ளி தரு

சூரப் பகை வேலவர் அல்லால் ஒருவரைத்
தொடுவேனோ கையாலே ஓய்வேடனே

வள்ளி விருத்தம்

வல்லடி வாழக்காய் இங்கே வந்தல்லாமல் வேறே
பல பல விதமாய் நேர்தபடியுன்னால் ஆனமட்டும்
சொல்லுதற் கிசைந்தார் போற்றும் துணிகரமுடையோர் இந்த
எல்லையில் காணோம் மேலும் இது ஒரு பிழையோ செல்வாய்

வள்ளி வசனம்

கேளும் வேடனே உன்னைப்போல் துணிகரமுடையவர் நான் காணவில்லை ஆனதால் புனத்தை விட்டு அப்பாலே போம் பிள்ளையாய் வேடனே

வேடன் தரு

என்னடி பெண்ணே நீரும் எந்தனைப் போகச் சொன்னாய்
வண்ணம் கிளி மொழியே மகிழ்தென்னைச் சேரடியோடி

வள்ளி தரு

ஆரடா நீயும் மெத்த அதிகமாய் பேசவந்தாய்
பாரடா உன்னை வெட்டிப் படுகொலை செய்யச் சொல்வேன்

வேடன் தரு

அறிந்துமே உந்தன் மேலே அடைந்தேன் மதன்கணைக்கு
தெர்ந்தென்னைப் போவென்று சீறுகிறாய் பாவம்

வள்ளி தரு

பாவம் என்று சொல்லி பரிகாசமோ வேடா
ஆவலாய் என்னைச் சேர அடுக்குமோ மதிகேடோ

வேடன் தரு

மதியிழந்தேன் உந்தன் தமையன்மார் தினைப்புனத்தில்
கொதியில்லாமல் வைத்த கீர்த்தி நானே நீயோ

வள்ளி தரு

அறிவது ஏதுவேடா அண்ணனார் குறவர் கோனை
பெருநிதி வல்லாப் பேசாதே போடா பாவி

வேடன் தரு

போவேனோ கரடி மான் கடம்பை முயல் நரியும்
ஆவாய் இருபேரும் அருந்தலாம் வாரும் பெண்ணே

வள்ளி தருவள்ளி தரு

அருந்தலாம் என்று அபிநயம் பேசுகிறாய்
வருந்தாதே தலைக்கரடி நாயென்றறியாயோ

வேடன் தரு

நாய் நரி என்று நீயும் நகைப்பாக பேசுகிறாய்
வருவர்ய் என் குடிசைக்குள் மகத்துவம் பார்க்கலாம்

வேடன் விருத்தம்

சீரிட்ட முகத்தை நீரும் திரும்பி என்னாசை தீர
ஏரிட்டுப் பார்த்தார் வார்த்தையியம்பினால் இளக்கமுண்டோ
வாரிட்ட தனப்பெண் வள்ளிமுத்துத்தான் சிந்துமோதான்
பேரிட்ட இன்னதென்று பேசும் நானறியத்தானோ

வேடன் பாட்டு

1. வனக்குறப் பெண்ணே துலங்கிய மதுரசக்கனியே
வீர மொழிமானே எனக்கின்ப வரிசை மைத்துனியே

2. கனகத்திருமகளே மரிவிப்பச்சங்கட்டிச் செந்தேனே
செவ்விதழ் எனக்கு நிரந்தரத் தெய்வமுன்டெனக்கு

3. பழிக்குலக் குரம்பே உன்மன மென்ன பாறையோ
இரும்போ
பச்சிலை நிறத்தாள் தனத்தையும் கச்சினில்
மறைத்தாள்

4. பங்கையத் தேனே மன்மதன் என்னைப் பகழிசெய்தானே
தினந்தினம் நொந்தே உன்னைத் தேடியலைந்தேன்.

வேடன் கொச்சகம்

காவியென்னும் கற்புடைய கன்னியரே காமனிட
தேவிபோல் அழகுடைய செல்வமுள்ள மின்னலே
உன் அன்னைதனைத் தழுவி அணையும் விதம் செய்தீரானால்
பாவி நான் செய்யும் பணிவிடைகள் மெத்தவுண்டு

வேடன் வசனம்

கேளும் தோழிகாள்! வள்ளி நாயகியை உன்னோடு சேர இணைத்துத் தந்தால் மிகுதுவாய் இருக்கும் உதவி செய்வீராக

தோழிபாட்டு

அகலப்போவேடா உங்களை விட்டு அகலப்போவேடா
அகலப்போய் நில்லடா அபிநயப் படப் போறாய் சடுதியில்
ஓடிப்போ சவுக்கடி படப்போறாய்

வேடன் தரு

அகலப் போவேனோ உங்களை விட்டு அகலப்போவேனோ
அகலப்போய் நில்லென்ற அன்னம்போல் பாங்கிமாரே குயில்
விருதாய் வந்து கூவுதேயென்ன செய்வேன் (அகலப்போவே)

தோழி தரு

என்ன சொன்னீரிப்போ எங்கள் முன்னே ஏது சொன்னீரிப்போ
ஏற்காத வார்த்தைகள் சொல்லாதே தூரப்போ
(அகலப்போவேடா)

வேடன் தரு

தூரப்போய் நின்றாலும் சோகமதாய் வாடி
மாதர்களே என்னை மாரன் வருத்திறான்

தோழி தரு

அணைய விடோ மென்று ஆங்காரம் பேசுறாய்
துணையில்லாத வேடா தூரப் போய் நில்லடா

சபை விருத்தம்

இப்படி வள்ளி தேவி இகழ்ச்சியாய் கூறும் போது செப்பமாய் குருபரன் தான் தினம்புனத்தின் மீதே ஒப்பிய குறவர் கூட்டம் உன்னிய வரவே கண்டு கொப்பெனத் தழைத்து வேங்கை மரமென கோலமானார்

*– காட்சிமுடிவு –*

வேலநம்பி விருத்தம்

என்னிளம் தம்பியாக இருந்திடும் தங்கரூபா
பின்னமில்லாமல் நாமும் பிரியமாய் தினை விதைத்தோம்
வண்ண நற்பட்சி சாதி அழிப்பதால் அங்கேபோக
சொன்னதால் போனான் தங்கை சுறுக்குடன் பார்ப்போம்- வாராய்
என்றும் சங்கேதம் போல் இருந்திடும் தங்கரூபா சென்று எங்கள்
தங்கையாரைப் பார்த்து வருவோம் தங்கரூபா

தங்கரூபன் தரு

1. கானகத்தில் தேர்ந்தெடுத்த கண்மணிவாசனை அண்ணா
ஏதேதும் அறியாது இருந்தீரோ அண்ணா

2. அண்ணா எனது அண்ணா சொன்ன மொழி கேழும்
அண்ணா
கண்ணான தங்கையரைப் பார்த்துவாறன் அண்ணா

வேலநம்பி தரு

1. இப்பெரும் கானகத்தில் ஏதோ தமிழ் வாசைன
தங்கரூபா
சொற்பெற வீசுதே துலங்கு தென்றல் காற்றும்

2. நிழல் இல்லாப் புனத்துக்கே நிழல் மரம் வந்ததேதோ-
அதை
நிட்சயமாய் எந்தனுக்கு நீயுரைப்பாய் தங்கரூபா

தங்கரூபன் தரு

தேவர் சித்தர் யோகர் இங்கு தேடியே வந்தாரே அண்ணா
மாதான வள்ளிதன்னைக் கேட்டறிவோம் வாரும் அண்ணா

வேலநம்பி விருத்தம்

மங்கை மனிதமே தங்கை வள்ளி நாயகியே கேளாய்
மண்ணிய புனத்தில் வேங்கை மரமது வளர்ந்த செய்தி
முன்னமே கண்டதுண்டோ முனிவர்கள் மோசம் தானே
கண்ணியமாய் இப்பொழுது நவிலும் எந்தன் தங்கையரே

தங்கருபன் விருத்தம்

விந்தைசேர் குறவர்கெல்லாம் விதாரணமாகத்தானே
எங்களின் தமையனான இறைவனை போற்றி
சுந்தர வள்ளி தேவி தோழிகளுடனே கூடி அந்தமாய் இருக்க
வேங்கை மரம் நிழல் அதிகம்தானே

தங்கருபன் வசனம்

கேளும் அண்ணா நமது தங்கையாகிய வள்ளிநாயகி தோழிமாருடன் கூடிவிளையாட நல்லநிழலாய் இருக்கிற படியால் மரத்தை வெட்டாது விட்டுவிடுவோம் அண்ணா

வேலநம்பி வசனம்

அப்படியே ஆகட்டும் தம்பி

– காட்சிமுடிவு –

## காட்சி மூன்று

### காங்கேயன் வரவு விருத்தம்

நன்றென குறவர் கோனும் நல்கியே புனத்தை விட்டு
சென்ற பின் தழைத்த வேங்கை செழுமரம் நீங்கிக் கந்தர்
இன்று
நற்சமயம் என்றே ஏகிய மன்னராகி
நின்றவர் வள்ளிமன்னே நிமலரும் வருகின்றாரே

### காங்கேயன் தரு

1. ராசராசன் மகாராசன் காங்கேயராசன் கொலுவில்வந்தார்
தேசதேசர் புகழ் தேசர் காங்கேயராசன் கொலுவில்
வந்தார்

2. வாணமொடு வெடி பேரிகை தம்பட்டம் வானிலிடிபோல்
முழங்கவே நல்லமத்தாளம் தெய்யத்தோமென மன்னன்
கொலுவில் வந்தார்.

3. பத்துப் பதினெட்டு வாத்தியம் முழங்கிட ஒத்துப்
புல்லாங்குழலலூதவே
தந்தும்கடலும் முழங்கிட ஒலித்திட காசினியொர்கள்
கொண்டாடவே

### காங்கேயன் விருத்தம்

திருமாலின் மடந்தையோ மயில் அன்னங்கள் மகிழும்
மடந்தையோ
வேதன் நாவில் விளங்கும் மடந்தையோ விண்ணிடம்
தன்னிலமேவும் மடந்தையோ போதவரும் புகழும் மடந்தையோ
புகழ்வந்திவள் பெண்ணரசானதோ ஏது பெண்ணே நீர் இப்புனம்
வந்தது என்னமாயமோ எனக்குரை செய்வாய்

காங்கேயன் வசனம்

மகாவிஸ்னுவுடைய நாவில் விளங்கப்படா நின்ற லெட்சுமி தேவியோ மன்மதனுடைய பாரியாரியாகிய ரதி தேவியோ ஆகாச வாணியோ பூமிதேவியோ இவ்வளவு அழகு சௌந்தரியத்துடன் இப்புனத்தில் இருக்கப்பட்டவள் யாரே ஒன்றும் தெரியவில்லையே கர்த்தனே

காங்கேயன் தரு

1. ஊர்வசி மேனகை ரம்பை உத்தமியவள் ரதியோ இவள்
ஆர்மகளோ நானறியேன் அழகுமின் சோதிபோல்

2. கொஞ்சுறஞ் சகிமாருடன் கோதை விளையாடியிருக்கையில்

வள்ளி தரு

சோதிசேர் தினைக்கதிர் சோரம் போகாமலே
காவலாய் என்னண்ணர் புனங்காக்க வைத்திட்டார்

காங்கேயன் தரு

உன்னைத்தான் தனியாக ஓகோகோவென வைத்தாரே
சீனப்பெண் ஆகையால் தெரியவே உரைசெய்வாய்

வள்ளி தரு

வந்தவர் கித்தனை மனத்துயர் ஏதையா
எந்தனக்கிப் போது இயம்புவீர் ராசனே

காங்கேயன் கலிப்பா

கேளும் பெண்ணே உன்குயில்போன்ற குரலோசையைக் கேட்டு நம்பி இனங்களாகிய பட்சிகள் அழைக்குதென்று பட்சிகள் எல்லாம்வந்து கதிரை அழிப்பதனால் சொன்னேன் பெண்ணே

வள்ளி கலிப்பா

புனமழிந்தாலென்ன போர்நடந்தாலென்ன புகல்வதற்கே வனம்
வரக் காரியமேன் சொல்லுவீர் இப்புனத்தே க்னபுலிசிங்கம்
காட்டானையுண்டு கடந்து அப்பால் அனைபேரும் போகின்ற
பாதையை நோக்குவீர் அன்புடனே

வள்ளி வசனம்

கேளுமட ராசனே புனமழிந்தால் என்ன போர் நடந்தால் என்ன நீர் வரவேண்டிய காரணம் இல்லை புனத்தை விட்டு இப்பாலே போம் பிள்ளாய் ராசனே

காங்கேயன் விருத்தம்

அறக்கொடுமைசெய்த பழிகாறியேயுன் அனியாய முழுச்
சாமாத்தியமாகுமேதான் உறக்கமில்லை எண்ணி எண்ணியும்
உள்ளம் உருகுதடி திரும்பிப்பார்த்து திருக்கருணை புரியமனம்
இரும்போ கல்லோ கொடியிடையே உன்னைமணஞ்செய்து
கொஞ்சிக்குடி வைப்பேன் என் குணத்தை அறிந்திடாயோ

காங்கேயன் தரு

மானே மரகதமே மாங்குயிலே விரகமானேன் தேனே மாரன்
கணைகள் தெறிக்கின்றான் அணைவாய் பெண்ணே

வள்ளி தரு

அணையமாமிகள் ஆனேனோ உந்தனக்கு
இணையில்லாத வார்த்தை என்னிடதில் உரைத்தாய்

காங்கேயன் தரு

உரைத்தேன் தருமசிந்தை உன்னிடம் இருப்பதாலே
விரைந்த மாரன் கணைக்கு மேவலாம் வாரும்
பெண்ணே

வள்ளி தரு

மேவுதற்கெல்லாம் வேறில்லையோ பெண்கள் தேவர்க்கடிமை
என்று தெரியாதோ மன்னா

காங்கேயன் தரு

நேசமும் பாசமும் தெரிவாய் என்னிடத்திலே வாசமாய்
இருபேரும் மருவலாம் வாரும்பெண்ணே

வள்ளி தரு

பார்ப்பது ஏதுமன்னா பரியாசமோ சும்மா கார்க்கும்புனத்தை
விட்டு
கடந்து மப்பாலே போடா

காங்கேயன் தரு

அடியே வள்ளியே உந்தன் அழகும் குணமும் கண்டு
விரகமையலானேன் மேலாம் வாரும் பெண்ணே

வள்ளி தரு

அடியேய் வள்ளி என்று ஆங்காரம் பேசுகிறாய்
கொடிய கள்ளி என்று கூறுவதறியாயோ

காங்கேயன் தரு

போனாலும் மாரன்கணை பொறுக்குதில்லையோ பெண்ணே
ஆகாது ஆண்பழி அணைவாயே பெண்ணே

வள்ளி தரு

ஆகாதென்றேயுரைத்த அரும் பொருள் அத்தனையும்
தாகமாய் நான் பறித்து தரித்துக்கொண்டேனே மன்னா

காங்கேயன் தரு

தரித்துக்கொண்ட பொருள் தானுன்டோ உன்னை அல்லால்
பகிர்ந்து சுகிர்த்திடவே பரிந்துன்னை நாடிவந்தேன்

வள்ளி தரு

அடைவாய் என் குலதெய்வம்ஆறுமுகம் பாதத்தை
திடமாய் பணிந்தீரானால் கீர்த்தி நமக்குண்டு

காங்கேயன் தரு

கீர்த்தியும் பாசமும் கிருபையும் முண்டேயானால்
கார்த்திகேயனைப் போல காப்பேனடி பெண்ணே

வள்ளி தரு

காக்க எழுபேர் அண்ணர்மாருண்டு எனக்கிப்போ
பார்க்கவே உனைவெட்டிப் படுகொலை செய்யச்சொல்வேன்

காங்கேயன் தரு

கொலைசெய்தாலும் உன்னைக் கூடியணையாமலே
இரங்க மனமில்லையோ மேவலாம் வாரும்பெண்ணே

வள்ளி கொச்சகம்

எத்தனை நான் சொன்னாலும் எவ்வளவும் கேளாமல்
பித்த வெறி கொணடவர் போல் பிதற்றுகிறீர் நீருமுந்தான்
சற்றமொடு தாய் தகப்பன் எழுவர்வர் பேரும்
இத்தலத்தில் வந்த உந்தன் எண்ணமெல்லாம் சொல்லுவீரோ

வள்ளி வசனம்

கேளும் ராசனே எவ்வளவு சொல்லியும் கேளாமல் பிதற்றுகிறீர் உன்தாய் தகப்பன் சகோதரா் ஏழு பேரும் நீர் இங்கே வந்த காரியமும் அறியும்படி சொல்வீராக

காங்கேயன் விருத்தம்

தலமது செந்தூர் தந்தை சங்கரராசன் ஆகும்
உலகையும் படைத்தான் உமையவள் என்தாய் என்பார் கண்டாய்
இலகு காங்கேயன் என்று என்னை எவர்களும் சொல்லாகும்
நிலமையை அறிந்தோர் எல்லாம் நெருங்கிய சுற்றந்தானே

காங்கேயன் தரு

1. கங்கைவேணியின் உலகைக் காத்திடவேண்டி
வள்ளிமாதா என்னை காங்கேயராசன் என்று காசினியோர் செல்வாரடி வள்ளி மாதே

2. தங்க நிறமேனி எல்லாம் தணலாய் உருகுதடி வள்ளிமாதே என்னால்
தாங்கமுடியவில்லை தையலே எனைச்சேரடி வள்ளிமாதே

3. எங்கும் புவியில் உள்ளோர் ஏத்தித் தொழுவாரடி வள்ளிமாதேநாதன்
இங்கேவர என்ன தவஞ்செய்தாயடி வள்ளிமாதே

காங்கேயன் வசனம்

கேளும் பெண்ணே என் தந்தை பெயர் சங்கரராசன் தாய் பெயர் உமையவள் ஊர்பெயர் திருச்செந்தூர் அறிந்து கொள்ளும் பெண்ணே

வள்ளி வசனம்

கேளும் ராசனே உன் நிலமையை அறிந்து கொண்டேன் இப்புனத்தினால் நிற்காமல் சென்றுவிடும் ராசனே

காங்கேயன் தருக்கம்

மோகமாகினேன் வள்ளி என்னைமோடி செய்யாதே கள்ளி
ஏகப்பரவசமாகினேன் பெண்ணே தேனே மடமானேமததேகிருபை செய்வாய் (மோகமாகி)

வள்ளி தரு

எந்ந ஊர் காணும் மன்னாநீரும் இப்படி சொல்வதென்ன சொந்த மாமன்மகள் என்று சொல்கிறீர் மொழி விள்ளுகிறீர் போம் போம் அப்பால்

காங்கேயன் தரு

பொல்லாது அல்லப் பெண்மானே உன்னைப் புணர்திடச் சுகிர்தம்தானோ வல்லமை பேசாதே மாறன்வதை பொல்லாதது மாதேகிருபைசெய்வாய்

வள்ளி தரு

தேனே என்றிப்பேரும் மிகத் தெரியுமே ஊரும் தானே வாய்மதம் பேசுகிறீர் சும்மா தெறிப்பேன் வில்லால் அடிப்பேன் ஓடிப்போக நீயும்

காங்கேயன் தரு

அடிப்பேன் என்கிறாய் என்னையும் மாரன் தாக்கிறான் மலர்க்கணையும் அரிய குயிலே மயிலே உந்தனை அடைந்தேன் மிகத் தொடர்ந்தேன் அருள்செய்வாவாய்

வள்ளி தரு

தொடர்ந்திடப் பெண்ணும் நானோ உந்தன் சொல்லுக்கிசைவேனோ கடந்திடும் தினைப்புனத்திலே அண்ணர்கள் கண்டால் வதைசெய்வார்கள் ஓடிப்போ நீயும்

காங்கேயன் தரு

கொண்டவனுக்கு இல்லாட்டி ஞாயம் கொல்லுமோ பெண்டாட்டி தெண்டித்தே உந்தனைச் சேர்ந்து அணையவே செல்வமே மானே என் தேனே வாராயோ

வள்ளி தரு

வாராய் என்றும் உரைத்தீரெ மகராசன் என்று சொன்னீரே
தீராத காதலைத் தீர்ப்பது நான்தானோ எட்டாத கொப்புதனை
விட்டோடிப் போவீரே

காங்கேயன் தரு

வீரியம் இல்லாத மாதர் இந்த வேலைக்குக் கிடையாது
கோரினேன் உன்னைக் கோகுலமானேன் வாதையாகுதடி மாமன்
மகளாரே

வள்ளி தரு

மாமன் மகள்தானே மறுபுல்கும் நான் தானே காமன்கணைக்
குந்தன் கன்னிகாத்திருப்பாள் தாமதித்து நில்லாதே புருசன்
என்றியம்பாதே

காங்கேயன் தரு

புருசன் இல்லாத மாதர் இந்த வேலைக்குக் கிடையாது சீரும்
செல்வமும் சிறப்பும் உண்டாகி தேனே மட மானே சேரக்
கிருபை செய்வாய்

வள்ளி தரு

அணுவதாயிருந்தாலும் மயிலை ஆண்டவன் செயலாலும்
தனியறம் பொருள் என்று நீயும் எனைத்தழுவி பெரும் தயவாய்
வாழவாய்

காங்கேயன் தரு

காமறன்சுகத் தேனே இந்தக்காரியம் சொல்லுவானே மாமன்
மகளே வளிதல் லட்சுமி மானே சேரும் களிதீரும் எனக்கூடி
இன்பம் தாரும் பெண்ணே

வள்ளி தரு

கலிகல் தீர்ப்பது நானோ பொல்லாக் காமன் பேய் இதுதானோ
நாரிமோகனக் கல்யாணி பாடியே நடந்திடும் புனத்தை விட்டு
தொடர்ந்திடும் வழிதேடி

காங்கேயன் விருத்தம்

அறக்கொடுமை கூறிய தேயே வள்ளி கேள்
கொடிய மாறன் தன் கோட்டிலே நிக்கிறான்
அடிமையாய் முறையெழுதி தருகிறேன்
அணையடி சலாம் ஆயிரம் தருகிறேன்
கொடுமைகூறிய விரக சுந்தரி
கும்பிடுகிறேன் காலைப் பிடிக்குறேன்
விடுவிடு மினியும் உந்தனின்
காமநோய் வேளையாகிது மேலும் தாமதமேன்

காங்கேயன் தருக்கம்

மங்கையே எந்தனம் மனதை மாறன் வாதைக்கிறான் அன்னையே உன்னை மலரடி தனை நான் வருடினேன் உந்தனை அணைத்துசேர் மாமயிலே

வள்ளி தரு

மாமயில் என்றென்னை வனமதிலெந்தனை வலோற்காரம்
பண்ணாதே – என் மனதுக்கேளாத வார்த்தைகள் சொல்லாதே
வனம் விட்டேகிடுவாய்

காங்கேயன் தரு

ஏகுவாய் என்று சொல்லும் ஏந்திழையே வள்ளியரே – உன்
தனத்திடை சுற்றும்அணையா தையலே வருவாய் நீ

வள்ளி தரு

தையல் என்மேல் மையல் கொண்டு தயக்கம் மகராசனே உன்பெண்ணடிதனை நான் வருடினேன் உந்தனைப் புல்கிடவாமயிலே

காங்கேயன் தரு

புணர்ந்திட வாவென்று கடந்திடும் வார்த்தைகள் பூவைஎன் வள்ளி மாதே என் அண்ணர்மார் அறிந்தால் மோசங்கள் வந்திடும்சென்றுடுவீர்

வள்ளி விருத்தம்

ஆணைமுகவுருவமெல்லாம் அறிவுமே சிறிதென்றெண்ணி காணவே மாதர்மீது காதல் கொண்டு உள்ளமும் நொந்து பூண நினைப்பார் இந்தப் பூவையர் அருகிருக்க தானதை அறிவாய் மன்னா சொற்பனம் கண்டாயோதான்

வள்ளி வசனம்

கேளும் ராசனே முருகையனுக்கடிமை நீர் என்னுடன் வாதாடாமல் புனத்தை விட்டு ஓடும் பிள்ளையாய் ராசனே

காங்கேயன் தரு

மெத்தமையல் ஆகினேன் ஒருமுத்தம் தாடி அன்னமேகத்தும் கடலும் குயிலும் மாரனும் மெத்த வாதைகள் செய்கிறான் பெண்ணே

வள்ளி தரு

முத்தம் தாடி என்று ராசனே கத்துறாய்நீ ராசனே சித்தம் கொண்டென்னை சேரவந்த புத்திமானே நீர் ஏகுவீர்

காங்கேயன் தரு

மாரன் வாதையால் சோர்கிறேன் எண்ணைச் சேரக்கிருபைசெய்யடி
பாதம்வேண்டினேன் பார்வதி பட்சம் வைத்தென்னைச் சேரடி

வள்ளி தரு

சேர்கிறேன் என்று சொல்லும்ராசதேதூரவே எட்டி ஏகுவீர்
இன்பம் போக்குவீர்சீவன் நீக்குவீர் ஓடிப்போராசனே

காங்கேயன் தரு

அன்னமே உன் மேலாசை கொண்டு நான்
அறிவுமாறிக்கலங்கிறேன் என்னை வந்து தழுவடி மையல் தீரடி
மடமான மயிலே

வள்ளி தரு

நேசமாய் இங்கு ஆசைகொண்டு நீர் பேசவந்திடும் ராசனே
நீர் ஏகுவீர் உடல் வேகுவீர் மதிமாறுவீர் மகாராசனே

காங்கேயன் தரு

கன்னல் பொல் வள்ளிமாதே இந்த காவினில் சுகம் தாடி
என்னைக்
காலடியினில் சேரடி மனம் கூறடி கண்ணால்பாரடி

வள்ளி தரு

தோகை மாமயில் மீதிலேறி வந்தவர்க்கடிமை நானையா என்ன
சொல்கிறீர் என்னைப்போல் வீரர் தன்னை வெல்வீரா சொல்லும்
ராசனே

காங்கேயன் கொச்சகம்

அரும்பான சொல்லும் ஆசாரவார்த்தையும் ஆரணங்கே உந்தன் இரும்பாகுதல் இளகுமடி உன்மனம் இணங்கவில்லை என்னை இழப்பதற்கே இந்த மேதினியில் மருந்தாகுதல் சாட்சி சொல்வேன் வள்ளிமாதே

காங்கேயன் வசனம்

கேளும் பெண்ணே! நான் போய்வருகிறேன் நீர் சுகமாய் இரும் பெண்ணே

**~ காட்சி முடிவு ~**

## காட்சி 04

பண்டாரம் வரவு விருத்தம்

இவ் விதம் வள்ளி கூற இன்பமாய் கந்த நாதன் சென்திடம்
மன்னர் போக்கிச் சிறந்த பண்டாரம் ஆகி எவ் வித
மாத்திரையும் கோலும் உன்னிய வேலும் கொண்டு திவ்விய
வள்ளி முன்னே கந்த நாதரும் வருகின்றாரே

பண்டாரம் பாட்டு

01. கந்த நாத தம்பிரான் வந்தான் கைலை வாழும் கந்தநாதத் தம்பிரான் வந்தான்

02. சுந்தர விலாச ஞான தந்திர விதத்தினோடு முந்தி விளங்கிய தொந்தி விநாயகர் மைந்தன் சடாச்சர கந்தனுமாகிய கந்தநாத தம்பிரான் வந்தான்

03. சென்னியில் உருத்திராட்சம் புனைந்து கரந்தனிலே தண்டு கமண்டலமும் கொண்டு நன்னிய விபூதி அணிந்து காதில் குண்டலமும் புனைந்து

04. மின்னிய உருத்திராட்ச தாவிடம் மேவிய காண்டம் புனைந்து இன் உருவாகிய தன் உருவாய் பணி மன்னவராகிய நன்னயமுடனே (கந்தநாத)

05. பீதாம்பரங்கள் துலங்க வெற்றி வேல் கையில் பிரபல்லியமாக துலங்க பாதக் கொலுசு துலங்க ஆதிசேடன் பண்பான முடிதுலங்கவே

06. நீதிசேர் புராணமொடு வேதம் நாளும் விளங்க
வேணும்மாலொடு
மாமுனியோர்களும்
போத உணர்ந்து புணர்ந்து வனம் செல்ல (காத்த நாதத்)

07. ஆறுமுகன் பன்னிருகையன் சுவாமிநாதன் அன்பான
பேர்களும் மெய்யன்
பாருலகோர் மொய்க்கும் முருகையன் வள்ளிக்காய்
பண்டாரமாய் வந்தஜயன்

08 சீருள்ள அடான பாடிச் சிறந்த புனத்தை நாடி
வாரணிவள்ளி முன் கோளரியாகவே தரணியோர் புகழ்
சண்முகநாதன் (கந்த)

பண்டாரம் தேவாரம்

வேதகிரி கைலைமலை யொற்றியூரும்
விதித்திருக்கும் மலையாளம் கும்பகோணம்
வாதுபுரி மயிலாடுந்துறை சீர் கடை வந்திருக்கும்
கடையூரும் திரு நல்லாறும்
அதாலிரு நீடுறையும் பரமன் தானும்
அம்பலத்தில் அம்பலநார் ஆடும்வாரும்
ஓதரிய வேதமுதல் விளங்குகின்ற
ஓம் நமசிவாய குரு ஒருவன் தானே

வேலநம்பி விருத்தம்

இந்தக் கானகத்தின் மீதே யாரோ தனியாய் மெத்த
நொந்துளம் கலங்கி முள்ளில் தளைந்து வழியும் தம்பி

சந்துக் குந்தாக நோக்கித் தள்ளாடி எதிரே வரும்
அந்தமாய் எல்லோரும் போய் ஆரென அறிகுவோமோ

வேலநம்பி வசனம்

கேளும் தம்பிமார்களே இந்தக் காட்டிலே யாரோ
ஒரு பெரியவர் தென்புறமாக வந்திருகிறார் அவரை
ஆரென்று பார்த்து வருவோம் தம்பிமார்களே

வேலநம்பி மறு விருத்தம்

ஐயனே போற்றி போற்றி ஆன்ற வித்தகரே போற்றி
வையகம் உய்ய வந்த மாதவர்க்கரசே போற்றி
செய்ய பொற்பாதம் நோகத் தேவரீர் தனியாய் இங்கே
உய்யவே வந்த செய்தி உரையும் நான் அறியத்தானே

வேலநம்பி வசனம்

சரணம் சரணம் ஐயா சுவாமி! தேவரீர் இந்தக் கொடிய காட்டில் தனியாய் வந்த காரியம் இன்னதென்று சொல்லுங்கள் ஐயா சுவாமி

பண்டாரம் விருத்தம்

சந்ததி மகிழ்வில்லாத சகல சாம்ராட்சியம் கொண்டு
விந்தையாய் தந்தைபேரும் உன்னிய அன்னைபேரும்
விந்தையாய் வந்தவாறும் மேவிய உமது நாமம்
சந்தேகம் தீர நன்றாய்ச் சாற்றுவீர் தம்பிரானே

வேலநம்பி வசனம்

கேளும் சுவாமி! தாய் தகப்பன் பேரும் உங்களுடைய நாம நேயமும் எந்த ஊர் இருந்து வருகிறீர் என்றும் சொல்லுங்கள் ஐயா சுவாமி

பண்டாரம் தரு

1. நான் வந்தகாரியம் கூறக்கேள் குறவர்கோனே
நான் வந்தகாரியம் கூறக்கேள்
விந்தை கயிலைவாழ் நந்தவனத் தம்பிரானும்
மைந்தனும் பெரிய கந்ததத்தம்பிரானும் வந்தகாரியம்

2. பொதிய மலையிலிருந்து குருமணிக்குபோதகம் தன்னை வருத்தி
நலமிகு சாரமிருத்தி திரு முனிக்கு
நண்பனாய்ச்சிந்துகள் படித்து
நதியில் ஆடியகங்கா நல்கியமாயபதி
கோதாவரி கிருஸ்ண கோணாசலத்தில் மூழ்கி
வந்தாரையா

3. கைப்பொருள் தன்னை இழந்து கள்வர் கையில்
கமண்டலம் பறிகொடுத்து
மெய்ப்பொருள் தனை மறந்து கண்ணில் ஓமென
சைகையாய் திறந்து
ஏசிடுவாரில்லை உய்ய வகையும் காணேன்
சொல்வதென்ன புன்கைவராளி ராகம் பாடிக்கொண்டு

பண்டாரம் வசனம்

இதுதான் என்னுடைய வரலாறு அறிந்து கொள்ளும்
குரவர் கோனே

வேலநம்பி விருத்தம்

வந்தவர்க்கு இங்கே வார்த்தைகள் கிடையாதையா
அந்தமாய் எழுந்து மெள்ள அருதாய் வாரும் சுவாமி
செந்ததேனும் கலந்திடும் தினைமாவும்
விந்தையாய் தருவோம் வாங்கி மேன்மையாய் புசித்திடாயே

வேலநம்பி வசனம்

கேளும் சுவாமி! தேவரீர் வந்த காரியம் இங்கே கிடையாது எங்கள் தினைப்புனத்திற்கு வந்தாய் மதுரமாகிய தேன்தினைமா தந்து பசியாற்றி விடுகிறோம் வாருங்கள் ஐயா சுவாமி

பண்டாரம்(தம்பிரான்)விருத்தம்

வள்ளியெனும் பெண்ணொருத்தியிங்கே உண்டோ
வளர்தினைப்புனமும் என்றோர் புனமும் உண்டோ
கள்ளமொழியோ நிசமோ சொன்னீரம்மா
களைத்து வந்தேன் நெடுந்தூரம் நானும் மெள்ள
விளையாட்டும் காட்டி வேளையிலே வந்து சீமாட்டி முன்னே
விட்டு
தன்னில் எண்ணிடாமல் காக்கச் சொன்னால் தருமமுன்டோ
குறவர் குலத்தலைவர்கோனே

பண்டாரம் வசனம்

கேளும் குறவர்கோனே! வள்ளி என்றொரு தங்கை இருக்கின்றாளோ தினைப்புனமும் இருக்கின்றதா நல்லது என்னை அவ்விடத்தில் விட்டு என்வயிற்றுப் பசியை தீர்க்கச் சொல்லும் குறவர் கோனே

வேலநம்பி தரு

1. வாரும் வாரும் ஐயரே கூடநடந்து வாரும் ஐயரே
சாரும் பிரமராகத்தன் வேடம் தரித்தவரே காவியுடுத்தவரே
ஐயா (வாரும்வாரும்)

2. தனக்கொடிய மூவாசை தனைப்போக்கி
நம்பும் மெஞ்ஞானத்தில் நடப்பவரே ஐயா (வாரும்)

வேலநம்பி விருத்தம்

மங்கை மானிதமே தங்கை வள்ளி நாயகியே கேளாய்
சங்கமா நதிகளாடித் தேனும் தினைமாவும் கலந்து
பசியாற்றி விடும் தங்கையே.

வள்ளி தரு

தம்பிரானே அமுதுண்ண வாருமையா சுவாமி
வெம்பிய களைப்பென்றெங்கள் அண்ணருக்குரைத்தீர்

பண்டாரம் தரு

பூவையே எனக்குப் பசி பொறுக்குதில்லடி பெண்ணே வள்ளி
பாவம் வராமல் அமுதுபடைத்திடுவாய் தெள்ளமுதே
அமுதே உண்டானால் பசி ஆறல்லாமடி பெண்ணே வள்ளி
அருள்தினைமாவதைத் தின்றால் உயிர் போமடி தெள்ளமுதே

பண்டாரம் தரு

உயர்போகும் என்றுரைத்திர் குறவர் நாங்கள் சுவாமி
உண்பதும்
தேன் தினைமாவைத் தின்றால் உயிர் போமடி தெள்ளமுதே

தம்பிரான் தரு

பருவமதான தினால் உண்பீர்களா நீங்களதை
பழுத்த கிழவனிதை உண்ணலாமோடி தெள்ளமுதே

வள்ளி தரு

பெண்கள் என்பது மென்ன கோபமுண்டோ சுவாமி
புசித்தாலிங்கனம் வரும் என்றே சுவாமி

தம்பிரான் தரு

சொல்வதேன் குடிசைகள் வந்தபோதடி வள்ளிமாதே
தோன்றியபடிக்குத்தானே உண்ணவேணும் தம்பிரானே

வள்ளிவிருத்தம்

அருமறைப் பொருளே எங்கள் அண்ணலே தம்பிரானே உருகிய
பசியால் வந்து வந்து உமக்கு நேரங்களாச்சி பெருகுதேன்
தினைமாவோடு பேதையாள் மனங்களிக்க தருகிறேன் நேம
நிஸ்ட்டை தன்னையே முடித்துவாரும்

வள்ளி வசனம்

கேளும் சுவாமி! பசிக்கிறது வந்து வெகுநேரமாகிவிட்டது தங்களுடைய நேமநிஸ்ட்டைகளை முடித்துவிடும் சுவாமி

தம்பிரான் ஆனந்தக்களிப்பு

1. ஆகார கைலாய வாசா என்னை
ஆளும் சதானந்த நடன கம்பீரா

2. மருவும் திரியோகப் பிரகாச —உமை
பார்வதி மகிழும் தற்பரவிலாசா

3. கதிதருமால் விடையாளா- காள
கண்டமிலங்கு கதிர்மழுப்படையாளா

4. தந்தை மேவும் திரிபுர சங்கரா எங்கும்
தானாய் பிறந்த பிரணவ ஓங்காரா

5. ஐந்துகரத்துந்தி முகப்பாலா தினம்
ஆனந்தமான திரிநேத்திர விலாசா.

6. விந்தை விளங்கும்திரி சூலா நாளுமே
அடியார்கள் தொழும்மது சீலா

7. எந்தனைக் கருள் புரிசீலா இங்கு
வள்ளியை நான்சேர வகை அருள்நீதா

தம்பிரான் விருத்தம்

செகமெனும் முழுதாய் மன்னன் சிறந்த தோர் யோகியாகி
அகமகிழ்ந்துருகிக் காமம் அணுகிய விருத்தம் பெற்றேன்
சுகமெனும் பெண்ணே வள்ளித்தோகையே நேமநிஸ்டை
வகையுடன் முடித்து வந்தென் பசியைத்தீர்ப்பாய்

தம்பிரான் வசனம்

கேளும் பெண்ணே! நேமநிஷ்டை முடித்து வந்தேன் என்னுடைய பசியைத் தீர்ப்பாய் பெண்ணே

வள்ளி தரு

இந்தாருங்கள் நான்தேன் தினைமா உண்ணத் தாறேன் சுவாமி
ஏகும்போது புசித்திடவே வேறு தாறேன் சுவாமி

தம்பிரான் தரு

மங்கையே ருசிக்குதடி எந்தன் நாவும் பெண்ணே வள்ளி ஒரு
மனதாய் தரவேணும் உத்தமியே சித்தம் உண்டாகும்

தம்பிரான் தரு

பொங்கமாக நாவறண்ட தண்ணீர்த் தாகம் பெண்ணே வள்ளி
பொறுக்கவும் கூடுதில்லை என்ன செய்வேன் பெண்ணே

தம்பிரான் விருத்தம்

ஐயய்யோ வள்ளிமாதே அரும்பசி வருத்தத்தாலே
பையவே நடந்து வந்தேன் பசியைத் தீரென்று சொல்ல
செய்தேன் தினைமா தந்து என் சீவனைப் போக்கலாமோ
வெய்ய நீர்த்தாகம் மேவுதே என்ன செய்வேன்

தம்பிரான் பாட்டு

தண்ணீரில்லாமலே தவித்துப் புலம்புதென் ஆவி
சத்தியாமாய் என் நாவை வறட்டுதே வறட்டுதே பாதகி பாதகி

வள்ளி தரு

பாதகி என்றெனைப்பாராமல் பேசுறீர் ஐயரே ஐயரே
நீரும் பைய நடந்து தண்ணீர் உண்ணப் போவீர் காண் ஐயரே
ஐயரே

தம்பிரான் தரு

பித்தம் பிடித்தால் போல் கிறுகிறுக்குதே தலை சுற்றுதே
சுற்றுதே பற்றிப் போதகமாய் செவியடைத்து நீரும் வற்றுதே
வற்றுதே

வள்ளி தரு

புத்திகுறைந்த முதியோர் எனும் முறைதானோ நீரும்
புலம்பினால் என்ன பலன் வரும் போய் வருவீர் காண் ஐயரே
ஐயரே

தம்பிரான் தரு

வேப்பிலை போலே கசக்குதே தேன் தினைமாவும்
மீறுதே தொண்டைக்குள் காறிச் சுழற்றுதே பாதகி

வள்ளி தரு

செப்பினீர் நஞ்சென்று தேன் தினைமாவைத் தான் ஐயரே ஐயரே
நீரும் தினைமட்டும் தின்று நன்மை கிடைக்கல்ல ஐயரே ஐயரே

தம்பிரான் தரு

சாதிசனமென்றாலும் வேளைக் குதவி செய்யாரே நானும் தானாகவே
நடந்து சாகிறேன் எந்தனின் காயமோ காயமோ

வள்ளி தரு

இப்படிக் கோபத்தை என்முன்னே காட்டாதே ஐயரே ஐயரே
நானும் எட்டிக் கனியை இசைந்து களித்தேனோ ஐயரே ஐயரே

தம்பிரான் விருத்தம்

தடுத்துரை சொல்லாக்குறவர் கோன் உன்
தமையன்மார் எல்லோரும் என்னைத்தான் கூட்டி
அடைக்கலமென்று என்னிடத்தில் விட்டதற்கோ
அவகேடாய் மாவென்று நஞ்சைத் தந்தாய்
திடுக்கென நான் சுபமாய் வாங்கி உண்டேன்
செவியடைத்துக் கண்ணுமிருட்டி
இருமல் எடுக்குதடி பாவி தண்ணீர் காட்டாயோ நான்
மனமிரங்கலையோ என் செய்வேன்

தம்பிரான் வசனம்

கேளும் வள்ளிமாதே! உன் அண்ணன்மார் என்னை உன்னிடத்தில் அடைக்கலமாய் வைத்துச் சென்றார்கள் தினைமா என்று நஞ்சைத் தந்தபடியால் என் சீவன் வீணாய்ப் போகுமுன்னே தண்ணீர் தாரும் பெண்ணே

வள்ளி கொச்சகம்

இஷ்டமுடன் உனையணைத்து என்னிடத்தில் கூட்டிவந்து விட்டவர்கள் தன்னை நாவறட்டுவதல்லால் மட்டுத்தப்பாய் என்னிடத்தில் வாய்பேசிய வாறென்ன அட்டியில்லை ஐயா வந்தேன் வருவாயோ

வள்ளி வசனம்

கேளும் சுவாமி! என்ன பேசியும் ஆவதில்லை என்விதிக்கு என்ன செய்வது தண்ணீர் காண்பிக்கிறேன் வாரும் ஐயா சுவாமி

வள்ளி தரு

தம்பிரானே நீர் என்னை வாரும் என்றீரே என்
தமையன்மாரும் புனமதில் தேடுவாரோ தேடு

தம்பிரான் தரு

தேடுவாரென்று மோடி பேசுகிறாய் வள்ளி எந்தன்
சிந்தை வாடியுயிர் நொந்து போகுதென்ன பாவம்

வள்ளி தரு

வாதை என்றெனது மீதிற் கூறுவது பாவம் இந்த
மார்க்கமாகவே பொய்கை மீதிற் செல்லாமே

தம்பிரான் தரு

செல்வதென்றென்முன் மோடி கூறுறாய் வள்ளி தெரியவே
பொய்கை காண்பிப்பதென்ன வெகு நேரம்

வள்ளி தரு

காண்பிக்கவே நான் வாரும் எனது தம்பிரானே கடுகியே என்
தமையன்மார் வருகுமுன்னே வருவேனே

தம்பிரான் தரு

வாரும் வள்ளி கேள் முன்னே கோலைப்பிடித்தேகும்
வனத்தில் மிருகமெதிர்த்தால் என்ன நீர் செய்யலாகும்

வள்ளி தரு

செய்யலாங்கேள் வனத்தில்மிருகம் எதிர்த்தாலே
அதை மாத்தியாக்குவேன் மதயானையைப் பணிக்குவேன்
நானே

தம்பிரான் தரு

பணியும் வள்ளி கேள் சுனையும் நீரும் இதுதானே நான்
நான் பருகி வருகிறேன் பைரவி பாடிய மானே மடமானே
இந்தக்கிழவன் உன்னை என்ன செய்தானடி வள்ளிமாதே
மடுவில் தள்ளி விடச் சம்மதித்தாயடி வள்ளிமாதே

வள்ளி தரு

நானே உன்னைத் தள்ளினேன் நாசக்காரக் கிழவா
ஏனோ என்மீதிற் பழி வீணாய்ச் சுமத்துகிறாய்

தம்பிரான் தரு

விழுந்தவுடனே நின்று வேடிக்கை பார்க்கிறாய் ஐயோ
எழுந்து நான் வரும்விதம் சொல்லுவாய் வள்ளிமாதே

வள்ளி தரு

சனியனே உன்னைத் தூக்கிச் சாத்தியமாய்ப்போக
இனி என்ன செய்வேன் ஐயோ இது எந்தன் காலமோ?

தம்பிரான் தரு

கைகொடுத்தென்னைத் தூக்கிக் கரைவிடும் வள்ளி
செய்கிறேன் நமஸ்காரம் சீக்கிரமாவாடி

வள்ளி வசனம்

இதோ கையை நீட்டினேன் பிடித்துக்கரை ஏறும் காண் சுவாமி

வள்ளி விருத்தம்

தவித்தினைப்புடனே வந்த தம்பிரான் என்றீர் இப்போ
இனித்த தேன் தினைமா தின்று இசைந்த நீர்த்தாக்கத்தாலே
கனிந்தென்னைத் தீர்த்தங் கேட்கக் காண்பித்தேன் மிகநீருண்டு
தனியவே இங்கிராமல் நடந்திடும் உமது நாடே

வள்ளி வசனம்

கேளும் சுவாமி! உன்னாலே நான் பட்டபாடு போதும் இன்னமும் இருந்தால் என்ன வருமோ தெரியாது ஆனபடியால் மெல்ல நடவுங்கள் ஐயா சுவாமி

தம்பிரான் வசனம்

கேளும் பெண்ணெ அதெல்லாம் இருக்கட்டும் ஒரு கருமம் இருக்கிறது அதையும் தந்தால் போய் விடுவேன் சொல்லட்டுமா

தம்பிரான் விருத்தம்

நடந்திடும் என்று சொன்ன நங்கையே சொல்லக்கேளாய் நடந்தி
பசியால் வந்து காமலா கிரி சூழ்ந்தென்னை தொடர்ந்திடும்
மதவாள் துளைக்குதே என்ன செய்வேன் அடர்ந்திடும்
தனத்திலே என்னை அணைத்திட்டால் சுதிர்தம் தானே

தம்பிரான் விருத்தம்

புவையே என் வள்ளிமாதே புணர்வோம் இந்தச்சோலை தன்னில்
ஆவல் கொண்டு வந்தேன் பெண்ணே அன்புடன்
சேர்தெள்ளமுதே

வள்ளிதரு

அன்புடன் தண்ணீர் கேட்டு அரியவனமீதிழைத்து துன்புறவே
வார்த்தை சொன்னால் துணிவேனடா பண்டாரமே

தம்பிரான் தரு

துணிவேன் என்று சொல்லுகின்ற தோகையில் தங்கையையரே
பணிவேந்தனும் பொன்னடியைப் பட்சம் வைத்துச் சேர்வாய் பெண்ணே

வள்ளி தரு

பட்சமென்ன பாவமென்ன பழுத்த கிழப்பண்டாரமே
இச்சை கொண்டு வந்தியடா லெட்சைகெட்ட பண்டாரமே

தம்பிரான் தரு

தெள்ளமுதே வள்ளியரே நான் செத்தாலும் உனைமறவேன்
கள்ளிவிழும் சோலையீலெ கலந்தணைவோம் காரிகையே

வள்ளி தரு

குள்ளவேடம் கொண்டு தண்ணீர் காட்டவே கூட்டி
புல்க மனம் கொண்டாய் கிழப்புத்தியோ சொல்பண்டாரமே

தம்பிரான் தரு

புத்தி என்ன வள்ளிமாதே புணர்வோம் இந்தச் சோலைதன்னில்
சித்தம் வைத்து ஆதரிப்பாய் தேன் மொழியே தேவியரே

தம்பிரான் தரு

கொல்லுவீர் பின்னாலே வள்ளிகோவம் பொறுத்தணைவாய்
வெல்லுறான் மாரன் கணையுமெ அன்னமே பெண்ணே

வள்ளி தரு

சுமப்பதேண்டா பாவி தொட்டாற் கீழே விழுவாய் நிமைப்பொழுதில்
உன்னை வெட்டுவேன் அடடாபாவி

தம்பிரான் தரு

வெட்டுவீர் பின்னாலே மேவுவாய் கோபம் பொறுத்து நட்டமென்ன
காம சஞ்சீவி அன்னமே வள்ளி மாதே பெண்ணே

வள்ளி தரு

காம சஞ்சீவி என்றுதுதித்த சாவேரி பாடி
நேர் முகமாகவே ஏகுவீர் அடடா பாவி

வள்ளி தரு

தம்பிரான் என்றபேர்க்குத் தரிக்குமோ மாதர்காலில்
வெம்பி நீ பணிவதாலே மேலவர் நகைத்திடாரோ
அம்புலி மனிதர்க்கெல்லாம் அனியாயக் கிழவா இந்தக்
கம்பினால் அடித்து உன்னைக் கடத்தியே புனஞ்செல்வேனே

வள்ளி வசனம்

கேளும் கிழவா இதோ உன்னைப் பிடித்துத் தள்ளிவிடடேன்
நானோ என் புனம் போகிறேன் கிழவா

தம்பிரான் தரு

பூவையே யுனைத் தொடுவேனே தினைப்புனத்தில்
போக வழிநான் விடுவெனோ தினைப்புனத்தில்

வள்ளி தரு

என்னடா நீ என்னைத் தேடுவாய் அடடா பாவி
இப்போ என் கையாலடிபடுறாய் அடடா பாவி

தம்பிரான் தரு

அடிபடுகிறேன்என் சுகிர்தமே அன்னமே வள்ளி
ஆதரிப்பதுடன் கடமை அன்னமே பெண்ணே

வள்ளி தரு

விகிர்தமோ சொல் அன்னமிடவோ அடடாபாவிமேல்
விழுந்து என்னைத் தேடுவோர் அடடா பாவி

தம்பிரான் தரு

தொடுவதால் வியப்பேனடி அன்னமே வள்ளி தோகையே
பணிந்தேன் பெண்ணடி அன்னமே வள்ளி

வள்ளி தரு

பெண்ணடி பணிகுவானேன் தம்பிரானே என்றால்
பொய்யுரைத்து வருவானேன் தம்பிரானே என்றால்

தம்பிரான் தரு

வந்தேன் உந்தன் அழகைக் கண்டு அன்னமே வள்ளி
மகிழ்ந்தேன் உன்தன் நினைவுகொண்டு அன்னமெ பெண்ணே

வள்ளி தரு

கொண்ட நினைவு எங்கே போமடா அடடா பாவி
சங்கராபரணங் கூறக்கேள் அடடா பாவி

தம்பிரான் வசனம்

கேளும்பெண்ணே! வள்ளி அமிர்தமே என்னை இந்த வனத்தில் கூட்டி வந்து மடுவில் தள்ளி விட்டாய் அடித்துத்தினாய் அதையும் பொறுத்தேன் மறுபடியும் என்னைக் கெட்டவன் என்றும்கிழவன் என்றும் பலவாறாகச் சொல்லிப்பேசினாய் அதையும் முருகனுக்காகப் பொறுத்தேன் ஆனபடியால் என் சொல்லுக்கு அடங்காமல் போகிறாய் வள்ளி உன் கெட்டித்தனமும் தெரியும் யானை வரும் போகாதடி வள்ளி

~ **காட்சி முடிவு** ~

# காட்சி ஐந்து

விநாயகர் பாட்டு

1. வந்தாரே வெள்ளை விநாயகர் யானைரூபமாய்
வாறாரே வெள்ளை விநாயகர்

இரு செவிமணியும் திருமுக நயனமும்
தருகிட முத்தமிழ் அரிகிடமேதினி- வந்தாரே

2. பொருதிட மும்மத மதகரியாகவே இந்த மொழி கூறும்
வள்ளி தனைச்சேர கந்தனும் கந்திட வந்து வந்து
வணங்கியே வந்தனம் செய்யவே சிந்தையில்
எண்ணியே

வள்ளி விருத்தம்

சிவகுருபரனே போற்றி தெய்வ சிகாமணியே என்செய்வேன் தவறுகள் செய்தேனே நான் தம்பிரான் அருகே வாரும் குவலயம் நடுங்க யானைக் கூட்டம் வருகுதையா கபடுகள் செய்யவேண்டாம் காத்திடும் தம்பிரானே

வள்ளி தரு

1. அரகர தம்பிரான் உமக்கடிமையாய்
வருகிறேன் என்பிரான்

2. கரியமலைபோல் யானை வருகிறதே எந்தன்
கண்ணீரும் ஆறாய்ப் பெருகுதே

3. பசியாறச் செய்திட்ட பாவமோ இந்தப்
பருத்த யானப்பயம் மெத்த வருந்துதே

4. கால் கையுடன் எல்லாம் நடுங்குதே இந்தப்
பருத்த யானைப் பயம் மெத்த வருத்துதே

தம்பிரான் தரு

1. கோபம் வந்ததினால் வள்ளியே யானை
குதித்தோடி வரச் செய்வேன் துள்ளியே

2. ஆனாலும் ஒருமுறை சொல்லடி என்னை
அணைந்து ஒரு முத்தம் கொடடி

வள்ளி தரு

1. புல்கச் சமயமிது அல்லக்காண் இந்தப்
புகர்முக யானைதான் போகுமோ

2 .பற்றினில் இருந்த என்னை நீர் இந்தப்
பாரவனம் அழைத்தீர் முன்னே

3. பெண்தனக் கிரங்காத பாவியே நீரும்
பெருமை தான் அறியாத துரோகியே

தம்பிரான் தரு

1. போகும் நாம் இருபேரும் சேர்ந்தாக்கால்
புகர்முகயானை போகும்தான்

2. புறத்தாலே கூசாமல் இருப்பேனே யானைக்குள்
அது வீசிக் கொளளுமே அந்த வேளைக்குள்

வள்ளி தரு

நீர் சொன்ன முகாரி தனக்கிணங்குகிறேன்
இந்தத் தும்பிதனை துரத்தும் எம்பிரான்

தம்பிரான் விருத்தம்

சுவாமி என்றென்னைக் கூவித் தோன்றிய வள்ளி கேளாய் மான்மிகுமானீன்ற மைந்தன் மாமுகுந்தன் தன்னையிப்போ நாமிருபேரும் புசித்தால் நடந்திடும் கானகத்தில் காமிதம் தளைத்த சோர்வாய் கனத்த பாவங்கள் தீர

தம்பிரான் வசனம்

கேளும் பெண்ணே! நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நாம் இருவரும் சேர்ந்த பிறகு ஒரே மனமாக வணங்கினால் யானை போய்விடும் பெண்ணே வள்ளி அமிர்தமே

வள்ளி விருத்தம்

சுந்தரர் தித்தராலும்மடசதுர் மறையோர் குலிசத்தாலும்
சுந்திரிக்காக வந்து தும்பிமாமுகனே போற்றி
வந்திடும் தம்பிரானே மருவுவேன் மயங்கவேண்டாம்
சிந்தனை பண்ண வேண்டாம்சென்றிடும் கானகத்தில்

சபை விருத்தம்

வள்ளி இந்த வாறுரைக்கக் கந்தநாதன் மனம் மகிழ்ந்து
இருமூன்று மௌலியோடு உன்னிய தோர் கந்தநாதனிலே
வேல்துலங்க உயர் சேவற் கொடிமேலே தாவி நிற்க துள்ளியே
அசுரனை வென்ற வேலன் தூயவள்ளி மாதுமுன்னே
தோன்றினார் தெள்ளியே சீர்மாது சிகாமணியன்னேரம்
மனம்மகிழ்ந்து வணங்கி நின்று தரிசித்தாரே

கந்தசாமி தற்சொரூபம் விருத்தம்

ஓராறு முகமாட ஈராறு புயமாட ஓங்குவடி வேலுமாட
உச்சிதக்குண்டலமும் ரெத்தினப்பதக்கமும் ஒளிதங்க
முடிகளாட தோராலிங்கடச்சேவலும் கொடியாட தொண்டர்கள்
மகிழ்ந்தாடவே சொந்த நவவீரரொடுதேவர்களும் முனிவர்களும்
தொந்தோம் என்றாடுவாரே மூவாறு வாத்தியக்காரரும்
முழங்கவே வாணவெடி முழுங்கி எங்கிலும் ஆரம்பிக்கவே
சென்ற குறமாது மங்கையாம் வள்ளியும் சிந்தை
கொண்டடிபணியவே பாராளுமன்னவர்கள் என்நாளும் புஸ்பமழை
பொழிந்திடவே பச்சைமயில் மீதிலுறை தற்சொருபமாகவே
வந்தனன் முருகவேளே

கந்தசாமிபாட்டு

1. சுந்தரமிகுந்த ராசன் அந்தரத்தே துதிசெய்ய
கந்தமிழ் கடம்பணிந்த காவலன் வந்தார்

2. மேருவில் செஞ்சடை நாகம் முவிய வில்லம்பு
கொண்டு கூறும் நீல கண்டனருள் கோமானும் வந்தார்.

3. சூரனிட கடம்பமாலை துணிந்த வடிவேலும்
கொண்டு தீரமாய் விழங்ககின்ற தீரனும் வந்தார்

4. ஆறுமுகம் பன்னிருகை அற்புத வடிவேலுங்கொண்டு
கூறும் நீலகண்டனருள் கோமனும் வந்தார்

மறுதரு

1. அன்னையே என் வள்ளிமாதே ஆரணங்கே
சாற்றிடக்கேள்
வண்ணமயில் மீதில் வரும் மால்முருகன் நானல்லவோ

2. இந்த நதி சூழுகின்ற ஈசனருள் மைந்தனடி
செந்தி தனில் ஏறிவரும் சேவலனடி தள்ளமுதே

வள்ளி வசனம்

அரகர ஆறுமுகக் கடவுளே!
உங்கள் பாதார விந்தங்களுக்கு கோடி சரணம்
செய்தேன் பரம் பொருளே!

சுவாமி வசனம்

கேளும் பெண்ணே! வள்ளி அமிர்தமே
நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்
என் இடது பக்கத்தில் வந்து இருப்பாய்
பெண்ணே வள்ளி

**– வள்ளியம்மன் நாடகம் முற்றும் –**

## சுபம்.

குறிப்பு:-

இந்நாடகம் 17ம் நூற்றாண்டில் கணபதி ஐயர் (1709-1794) என்பவரால் எழுதப்பட்டது என்றும் வள்ளியம்மன் நாடகத்தை எழுதியவர் வட்டுக்கோட்டை கணபதி ஐயர் என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன எனினும் கணபதி ஐயரே இதனை இயற்றியுள்ளார் என்பது முடிபாயுள்ளது.

தொகுப்பாசிரியர் :- கலாபூசணம் தாழைசெல்வநாயகம்,
வாழைச்சேனை,
மட்டக்களப்பு,
இலங்கை.
தொ. இல, 077-3109524



நூலாசிரியர் பிரபல எழுத்தாளர் திரு. கே. எஸ். சிவகுமாரன் எழுத்தாளர் அ. மு. சி. வேலழகன் ஆகியோருடன் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில்.



கலாபூஷணம் தாழை செல்வநாயகம் எழுதிய "வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்" என்னும் நூலின் வெளியீட்டு விழா பேய்த்தாழை கலாசாரமண்டபத்தில் 18.09.2010 ல் நடைபெற்றபோது. நூலின் பிரதியினை கிழக்கு மாகாண முதலமைச்சர், கௌரவ சி. சந்திரகாந்தன் சட்டத்தரணி திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா அவர்களுக்கு வழங்கும் போது.



பப்பிரவாகன் நாடகம் சலங்கை கட்டும் நிகழ்வு பூசைபோடுதல் (1987)



"வள்ளியம்மன் நாடகம்" (குறவன் குறத்தி ஆட்டம்) வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயத்தில். அண்ணாவிமார்களுடன் கூத்தர்கள், பாடசாலை மாணவர்கள். தயாரிப்பு : கலாபூஷணம் தாழை செல்வநாயகம். (2000 ஆண்டு).




"வள்ளியம்மன் நாடகம்" (குறவன் குறத்தி ஆட்டம்) அண்ணாவிமாருடன் கூத்தர்களான குறத்தியும், பக்கப்பாட்டுக் காரர்களும் 2009 லயன்ஸ் கழகம் வாழைச்சேனை சகவாழ்வு மன்றத்தின் அனுசரணையில்.



கலாபூஷணம் தாழை செல்வநாயகத்துடன் அண்ணாவி செ.நல்லதம்பி கிராமசேவகர் பேய்த்தாழை திரு. எஸ். வரதராஜன் (வள்ளிதிருமண கூத்து மேடையில் ஆரம்பக் காட்சி) -2000



"வள்ளியம்மன் நாடகம்" ஸ்ரீ கயிலாய பிள்ளையார் ஆலயத்தில் மேடையேற்றப்பட்டபோது. (2000)



நூலாசிரியருடன் வில்லிசை மன்னன் மாஸ்டர் சிவலிங்கம், முன்னாள் அரசாங்க அதிபர் திரு. கே. மகேசன் (கென்ய் நாட்டின் இலங்கைத் தூதுவர்) பிரதேச செயலாளர் எஸ்.கருணாகரன், எழுத்தாளர். மு. தவராசா (முன்னாள் அதிபர்) திரு. க. வேல்முருகு ஆசிரியர் ஆகியோர்.



வாழைச்சேனை லயன்ஸ் கழக மண்டபத்தில் சமாதான சகவாழ்வு மன்றத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட வள்ளியம்மன் நாடகம் குறவன் குறத்தி ஆட்டம் நிகழ்வினையடுத்துஎடுத்த படம் (2009) திரு. T. இராஜன் (சமாதான சகவாழ்வு மன்றம்) மட்டக்களப்பு. திரு. எஸ். சுதர்சன் (வாழைச்சேனைப்பிரிவுசக வாழ்வு மன்ற உத்தியோகத்தர்). தொகுப்பாசிரியர் கலாபூஷணம் தாழை செல்வநாயகம். ஜனாப் AM அப்துல்காதர் J.P, திரு. க. நடேசன் (சமாதானக்குழுத்தலைவர்). அண்ணாவிமார், கூத்தர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.



"வள்ளியம்மன் நாடக" விளக்கம் பற்றி தொகுப்பாசிரியர் கலதபூஷணம் தாழை செல்வநாயகம் பேசுகிறார். அண்ணாவி. செ. நல்லதம்பி உதவி அண்ணாவி. க. தங்கவேல். ஆகியியோர் அருகில் உள்ளனர் இடம் : கல்குடா காளியம்மன் கோவில் அரங்கு




பேய்தாழை விபுலானந்த வித்தியாலய மாணவர்களின் வள்ளியம்மன நாடகம் (குறவன்) முருகன் ஆலய மைதானத்தில் குறவனாக செ.திராவிடமலர் (ஆசிரியை) அண்ணாவிமார் மா.வெள்ளக்குட்டி, க.தம்பிமுத்து. பக்கப்பாட்டு கி.ராஜினி, வி.சுதர்சினி (1987)



பப்பிரவாகன் நாடகம்''தயாரிப்பு புலவர்மணிகலாமன்றம் பேத்தாழை 1986ம் ஆண்டு.

நாடகத்தின் பெயர் - அதிகாயன் அமிர்தவல்லி (விலாசம்) காலம் 1947ம் ஆண்டு
அரங்கேற்றம் - பேத்தாழை புதிய பஸ்நிலையம் அமைந்துள்ள வளவு



மேல்வரிசை (இடமிருந்து வலம்) சு.சதாசிவம்,க.திருநாவுக்கரசு, கு.காசுபதியர், சி.பமுத்தையா பரிசாரியார்,கண்ணன் கந்தையா (நூலாசிரியரின் தந்தை), மெம்பர் சின்னத்தம்பி, கா.கதிர்காமத்தம்பி போடியார், ரெயிலர் சின்னத்தம்பி, விநாசித்தம்பி, சீ.நல்லதம்பி, சுப்பிரமணியம், பொன்னையா, க.காசுபதி, குழந்தையாகவுள்ளவர் கா.சேதுகாவலர்.
நடுவரிசை (இடமிருந்து வலம்) வேலன் சண்முகம், மனுக்கர் சின்னத்தம்பி (முதலமைச்சர் திரு.சி.சந்திரகாந்தனின் அம்மப்பா), இயமன் சின்னத்தம்பி, நாடக ஆசிரியர் பழனித்தம்பி, கா.கதிர்காமத்தம்பி, முருகப்பர் (கொண்டையான்), கொட்டான் செல்லத்தம்பி, க. செல்லத்துரை.
முன்வரிசை நடிகர்கள் (இடமிருந்து வலம்) வாத்தி செல்லன் (க.அந்தோனிப்பிள்ளை), க.ஆறுமுகம், வாச்சர் சுப்பிரமணியம், தெரியவில்லை, க.கதிர்காமத்தம்பி (கோணாமலை), வெள்ளைச் சாமித்தம்பி, சண்முகம் (குறிச்சார்), பொட்டக்கண் இராசையா (வவுண்), நாடக ஆசிரியர் சபாபதி(ட்றாமா), சிறப்பினாவுடன் பாலகிருஷ்ணன் (இந்தியா)
கீழே அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்)மு.தெய்வநாயகி (ரீச்சர்), திருமதி தவமணி தவராசா, முருகப்பர் கிருஷ்ணப்பிள்ளை (பீயோன்)
இரு தொங்கலிலும் இசைகருவிகளுடன் அமர்ந்திருப்பவர்கள் இந்தியர்கள்





கல்குடா வலய கல்வி அலுவலகத்தால் வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் (13.10.2011) அரங்கேற்றப்பட்ட கலிங்கப்போர் வடமோடிக்கூத்தின் காட்சிகளும், நூலாசிரியர் கௌரவிக்கப்படலும், விளக்கேற்றுதலும்....

## நூலாசிரியரின் நூல்கள்

1. ஏதிலிகள் - சிறுகதை
2. "ஈழம் வருகிறான் பாரதி" - நாடகம்
3. வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள் - ஆய்வுநூல்
4. வள்ளியம்மன் நாடகம் - தொகுப்பு நூல்
5. கண்டிராசன் கதையும், அனுமன் தேடிய சீதையும் - இருகூத்துக்களின் தொகுப்பு நூல்






கலாபூக்ஷணம் தாழை செல்வநாயகம் எழுதிய "வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்" என்னும் நூலின் வெளியீட்டு விழா பேய்த்தாழை கலாசாரமண்டபத்தில் 18.09.2010 ல் நடைபெற்றபோது. நூலின் பிரதியினை கிழக்கு மாகாண முதலமைச்சர், கௌரவ சி. சந்திரகாந்தன் சட்டத்தரணி திரு. கணபதிப்பிள்ளை தியாகராசா அவர்களுக்கு வழங்கியபோது எடுத்த படம்